ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும்

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3. தனிப் பிரதி 4 அணா

மலர் 14 } மார்ச்சு 1953 { இதழ் 3

சென்னை கவர்னர் பேசுகிறார்!

“கல்வி நிலையங்களின் நிர்வாகம், எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு, சுதந்திரம் உடையதாக இருக்கவேண்டும். அவற்றின் நிர்வாகத்தில் ஆட்சியாளர்கள் அடிக்கடி குறுக்கிடாமல் இருப்பது தான் நல்லது. கல்வி நிலையங்கள் தங்கள் சுதந்தரத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். தங்கள் சுதந்தரத்தை இழந்தால்தான் ஆட்சியாளர்களுடைய உதவித் தொகை கிடைக்கும் என்கிற நிலைமை இருக்குமானால், கல்வி நிலையங்கள், ஆட்சியாளர்களுடைய உதவித் தொகையைக்கூட வேண்டாம் என்று கூறி ஒதுக்கித் தள்ளிவிட்டு தங்கள் சுதந்தர உரிமையை நிலைநாட்டிக் கொள்ளவேண்டும். கல்வி நிலையங்கள் சிறந்த முறையில் வாழ்ந்து சீரிய பயனை நாட்டுக்கு அளிக்க வேண்டுமானால், அவை சுதந்தர புருஷர்களாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.”

ஆம்! இப்படித்தான் பேசியிருக்கிறார் சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா—10–2–53 அன்று—காசி நகரத்தில்!

காசி நகரத்தில் வித்தியாபீடம் என்கிற பெயரில் ஒரு சிறந்த கல்வி நிலையம் சென்ற முப்பது ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. அந்தக் கல்வி நிலையத்தின் இந்த ஆண்டின் பட்டமளிப்பு விழா 10–2–53 அன்று நடைபெற்றிருக்கிறது. அந்தப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, அரிய விரிவுரை ஆற்றியிருக்கிறார் சென்னை கவர்னர் ஸ்ரீ பிரகாசா. அந்த விரிவுரையில்தான் அவர் தெளிவாகவும் அழகாகவும் குறிப்பிட்டிருக்கிறார் கல்வி நிலையங்கள் சுதந்தர புருஷர்களாக உலவவேண்டுமென்று.

கவர்னர் அளித்துள்ள கருத்து, மிகவும் நியாயமானது; நியாய புத்தி உள்ள ஒவ்வொருவரும் நிச்சயம் ஏற்றுக்கொள்ள வேண்டியது; கல்வித் துறையில் நெருங்கிய தொடர்பு உடைய அத்தனை பேரும் தவறாமல் ஒப்புக்கொள்ளக் கூடியது.

நாடெங்கும் கல்வி நீரோடை விரைந்து பாயவேண்டுமானால்—கல்வித் துறையில் நம் நாடும் பிற நாடுகளைப் போலத் தலை நிமிர்ந்து நின்று வெற்றிக் கொடியை உயர்த்திப் பிடிக்கிற உன்னத நிலைமை உருவாக வேண்டுமானால்—எழுத்தறிவற்றவன் எவனும் இல்லை எங்கள் இந்தியாவில் என்று நாம் பூரிப்புடனும் பெருமையுடனும் பிற நாட்டாரைப் பார்த்துக் கூறுகின்ற அந்த அரிய வாய்ப்பு நம் காலத்திலேயே ஏற்படவேண்டுமானால், கவர்னர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப் போலக் கல்வி நிலையங்கள் சுதந்தர புருஷர்களாக இருந்து தான் ஆகவேண்டும்.

நாம் நீண்ட காலமாகவே சொல்லி வருகிறோம்—கல்வித்துறையில் ஆட்சியாளர்கள் நினைத்த நேரத்தில் எல்லாம் தலையிட்டுக் கொண்டு, தங்கள் மனம் போனபடியெல்லாம் புதுப்புது குழப்பங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கக் கூடாது. இந்த ஆண்டிலே ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வருவது—அடுத்த ஆண்டிலே அதை எடுத்து விடுவது—அதற்கடுத்த ஆண்டிலே வேறொரு திட்டத்தை நுழைப்பது—அதற்கடுத்த ஆண்டு அதையும் எடுத்து விட்டு இன்னொன்றை நுழைப்பது என்கிற முறையிலே ஆட்சியாளர்கள் சென்ற பதினைந்து ஆண்டுக் காலமாக நடந்து வருகிறார்கள். கல்வித்துறையில் ஏதாவது ஒரு மாறுதலைச் செய்ய வேண்டுமானால், அந்தத் துறையில் நீண்ட கால அனுபவம் உடையவர்களையும், அந்தத் துறையில் தற்போது ஈடுபட்டு இருப்பவர்களையும் கலந்து ஆலோசித்து, அவர்களுடைய சம்மதத்தையும் கருத்தையும் அறிந்த பிறகு தான்

அந்த மாறுதலைச் செய்ய வேண்டும். அதுதான் முறை. ஆனால் நம் ஆட்சியாளர்களோ அப்படிச் செய்வதில்லை. முன்பின் ஆய்ந்து பாராமல், கல்வித்துறை நிபுணர்களின் கருத்தை உசாவி அறியாமல், திடீர் திடீரென்று திட்டங்களைத் தீட்டி விடுவார்கள். தீட்டிய திட்டங்களை நடைமுறைக்கும் கொண்டு வந்து விடுவார்கள்.

ஆதாரக் கல்வி என்கிற பெயரின் கீழ் ஓர் அர்த்தமில்லாத திட்டம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறதே, அந்தத் திட்டத்தை ஆட்சியாளர்கள் இப்படித்தான் அனைவரின் கருத்தையும் அறியாமல் அவசர அவசரமாக நுழைத்தார்கள். கல்வித்துறை நிபுணர்களின் கருத்தை அறிந்து கொள்ளாமல் அவசரப்பட்டு செய்த காரியம் இந்த ஆதாரக் கல்வித் திட்டம். அப்படி நுழைக்கப்பட்ட காரணத்தால்தான், இந்தக் கல்வித் திட்டம், இன்றளவும் சரி, இனியளவும் வெற்றி பெற முடியாமல் முடங்கிக் கிடக்கிறது.

உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் ஹிந்தி மொழியை முதலில் கட்டாய பாடமாக நுழைத்த போதும் சரி, அதன் பிறகு தமிழ் நாட்டில் மட்டும் கட்டாய பாடமில்லை ஆந்திரம் மலையாளம் கன்னடம் ஆகிய பகுதிகளில் கட்டாயம் தான் என்று கூறியபோதும் சரி, அதன் பிறகு எங்குமே கட்டாய பாடமில்லை—விருப்பம் உள்ளவர்கள் மட்டும் படிக்கலாம் என்று கூறியபோதும் சரி, ஆட்சியாளர்கள், கல்வித்துறைத் தோழர்களைக் கலந்து ஆலோசித்தனரில்லை. அப்படி ஆலோசிக்காத காரணத்தால் தான், இப்போதும் சரி, உயர்நிலைப் பள்ளிக் கூடக் கல்வித் திட்டத்தில் ஹிந்தியின் ஸ்தானம் எப்படிப் பட்டது என்பதை எந்த உயர்நிலைப் பள்ளிக்கூட அதிகாரிகளாலும் நிச்சயமாகக் கூறமுடியவில்லை. ஹிந்திப் பரீட்சை தேவை என்று சிலர் கருதுகிறார்கள்—சிலர், ஆண்டு தோறும் அதில் பரீட்சை நடத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை, பாடங்கள் மட்டும் நடத்தப் பட்டால் போதும் என்று கூறுகின்றனர்—சிலர், பரீட்சை மட்டும் நடந்தால் போதும் என்று கருதுகின்றனர்—வேறு சிலர், அது மட்டும் போதாது, பரீட்சையில் மாணவன் பாஸ் மார்க்கு வாங்கியே ஆகவேண்டும் என்று கருதுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு குழப்ப மான நிலை இன்றைய தினம் உயர்நிலைப் பள்ளிகளின் கல்வித் திட்டத் தில் ஏற்பட்டு விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. இப்படி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் ஆட்சியாளர்கள் கல்வித்துறை நண்பர்களைக் கலந்து பேசாததுதான் என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

உயர்நிலைப் பள்ளிகளில், பூகோளம், சரித்திரம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் நெடுங்காலமாகத் தனித்தனியே போதிக்கப்பட்டு

வந்தன. அந்தப் போதனை முறையை நிறுத்திவிட வேண்டுமென்றும், மூன்று பாடங்களையும் ஒன்றாகக் கூட்டிக் கலந்து ஒரு புதிய கதம்பமாக்கி சமூக அறிவு நூல் (Social Studies) என்ற பெயரில் சொல்லித் தரவேண்டுமென்றும் ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் 'சென்னை ஆட்சியாளர்கள்; சில ஆண்டுகளுக்கு முன்பு. கல்வி நிபுணர்களின் கருத்தை அறியாமல் தான் இந்தத் திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். எனவே தான் இந்தத் திட்டமும் நற்பயனைத் தரவில்லை. மாணவர்கள், மூன்று பாடங்களில், எதிலுமே, முழு அறிவைப் பெற முடியவில்லை.

கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் கருத்தை அறியாமல், கல்வித் திட்டத்திலும் சரி, கல்வி நிலையங்களின் நிர்வாகத்திலும் சரி, எத்தகைய மாறுதல்களை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தினாலும் சரி, அந்த மாறுதல்களால் நன்மை விளையாது என்பதை எடுத்துக் காட்ட இங்கே மூன்று உதாரணங்களைத் தந்திருக்கிறோம். இப்படிப்பட்ட எடுத்துக்காட்டுகளை இன்னமும் ஏராளமாகத் தரமுடியும். இடமின்மை காரணமாக மூன்றோடு நிறுத்தியிருக்கிறோம்.

கல்வித் துறையில் செய்யப்படுகிற எத்தகைய மாறுதல்களையும் அந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைக் கொண்டே செய்வது தான் சிறந்தது என்கிற உண்மையைத் தெளிவாக அறிந்திருந்தார்கள் முன்னே இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள். அறிந்திருந்த காரணத்தால்தான், அவர்கள் ஆரம்பக் கல்வி சம்பந்தமான பிரச்னைகளை முடிவு செய்வதற்காக அந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைக் கொண்ட கல்விச் சபைகளையும், உயர்நிலைக் கல்வி சம்பந்தமான பிரச்னைகளை முடிவு செய்வதற்காக அந்தத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களைக் கொண்ட கல்விச் சபைகளையும், ஜில்லாவுக்கு ஒவ்வொன்று என்கிற முறையில் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். ஆரம்பக் கல்விக்கான சபைகள் 1920-ம் ஆண்டு முதலும், உயர் நிலைக் கல்விக்கான சபைகள் 1923-ம் ஆண்டு முதலும் தொடங்கி நடத்தப்பட்டு வந்தன. இந்தச் சபைகள் இருந்த வரையில் சென்னை மாகாணத்தில் கல்வித் துறையில் எத்தகைய குழப்பமும் ஏற்பட்டதில்லை. ஏனெனில் அப்போதிருந்த ஆட்சியாளர்கள், ஆரம்பக் கல்வியிலோ உயர் நிலைக் கல்வியிலோ எத்தகைய மாறுதல்களைச் செய்வதாக இருந்தாலும் இந்தச் சபைகளைக் கலந்து ஆலோசியாமல் செய்தது கிடையாது.

நம் நாட்டின் ஆரம்பக் கல்வியும் உயர்நிலைக் கல்வியும் சீர்பெற வளர்ந்து சிறப்புறத்திகழ வேண்டுமானால், 1937-ஆம் ஆண்டில் அப்

போது முதலமைச்சராக இருந்த ராஜகோபாலாச்சாரியாரால் எடுக்கப்பட்டு விட்ட இந்தக் கல்விச் சபைகளை மீண்டும் உருவாக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஆரம்பக் கல்விக்கு ஒன்றும், உயர் நிலைப்பள்ளிக் கல்விக்கு ஒன்றுமாக, இரண்டிரண்டு கல்விச் சபைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கல்விச் சபையிலும், அந்தந்த ஜில்லாவில் உள்ள ஆசிரியர்கள், மானேஜர்கள் ஆகியவர்களின் பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும். ஆரம்பக் கல்வி, உயர் நிலைக் கல்வி ஆகியவற்றின் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளையும், ஆட்சியாளர்கள், இந்தச் சபைகளின் ஒப்புதலைப் பெற்றே முடிவுகட்ட வேண்டும்.

இது நம்முடைய கருத்து. நம்முடைய கருத்து மட்டுமல்ல. கல்வித் துறை நிபுணர்களின் ஏகோபித்த கருத்தும் இதுதான்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள செகண்டரி கல்வித் திட்டக் கமிஷனின் முன்பாக செகண்டரி கல்வி சம்பந்தமான தங்களுடைய கருத்தைத் தெரிவித்தபோது, **தென்னிந்திய ஆசிரியர்கள் கழகம்** [South Indian Teachers Union], ஜில்லாதோறும் கல்விச் சபைகள் ஏற்படவேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துக்கூறியிருக்கிறது.

கோவை, நீலகிரி மாவட்டத் தலைமை ஆசிரியர்களின் கழகமும், அந்தக் கமிஷன் முன்னர் சாட்சியம் கூறியபோது, கல்விச் சபைகள் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கிறது.

நாம் கூறுகிறோம்—தென்னிந்திய ஆசிரியர்கள் கூறுகின்றனர்—கோவை நீலகிரி மாவட்டத் தலைமை ஆசிரியர்கள் கூறுகின்றனர்—கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள சகலரும் கூறுகின்றனர்—கல்விச் சபைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்—கல்வித்துறை அவற்றினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்—எல்லாரும் கூறுகின்றனர்—ஏகோபித்த குரலில் கூறுகின்றனர். என்ன செய்யப் போகிறார்கள் ஆட்சியாளர்கள்?

“கல்வி நிலையங்களின் சுதந்தரத்தில் கூடியவரையில் ஆட்சியாளர்கள் குறுக்கிடாமல் இருக்க வேண்டும்.”—கூறுகிறார் கவர்னர் தெளிவாக! ஏற்குமா ஆட்சிப் பீடம் அவருடைய கருத்தை? ஏற்குமா?

கல்கத்தா — ஓர் அபாய அறிகுறி!

“பட்டினி கிடக்கிறோம்! பரிதாபம் எங்கள் நிலை!”

“வறுமை வதைக்கிறது! வாழ வழி காட்டுங்கள்!”

“ஊராளவந்தோரே! எங்கள் ஊதியத்தை உயர்த்துங்கள்!”

“வேதனையால் வாடுகிறோம் — எங்கள் வாட்டத்தைக் குறையுங்கள்!”

“கனம் பொருந்திய மந்திரிகாள் — கருணை காட்டுங்கள்!”

“நாட்டோரே! நல்லோரே! எங்கட்கென்ன பரிகாரம்?”

இப்படிப்பட்ட வீர முழக்கங்கள் இடியோசைகளென எழுந்து கல்கத்தா நகரத்தையே அதிரவைத்தன பிப்ரவரி மாதம் 23–ம் தேதியன்று.

இடியோசைகளை எழுப்பியவர்கள் ஒருவர் இருவர் அல்லர் — ஆயிரமாயிரம் பேர்!

இடியோசைகள் எழுப்பப்பட்டதும் ஒரே இடத்திலிருந்தல்ல — கல்கத்தாவின் பற்பல பகுதிகளிலிருந்தும்!

ஆனால் இந்த வல்லோசைகளை எழுப்பியவர்கள் அப்படி ஒன்றும் இரும்பு நெஞ்சம் படைத்தவர்களல்ல — இளகிய உள்ளம் உடையவர்கள்தான்!

அவர்களெல்லாம் படிக்கத் தெரியாத பாமரர்களுமல்ல — ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளத் தோழர்களுமல்ல. கசடறக் கற்ற காளைகள். பிறருக்குக் கற்றுத் தரும் பெருமை படைத்தவர்கள். ஆம்! எழுத்தறிவிக்கும் இறைவர்கள் என்று வாயளவில் போற்றப்படுகிற, ஆயிரமாயிரம் **ஆரம்ப ஆசிரியர்கள்**தான் அவர்கள்!

சட்டத்தை மீறவேண்டும், சமாதானத்தைக் குலைக்கவேண்டும் என்பனபோன்ற அற்ப ஆசைகளை உடையவர்களா அவர்கள்? கிடையாது, கிடையாது! அமைதி, ஒழுங்கு, கட்டுப்பாடு, சாந்தி, சமாதானம், சட்டத்தின் திட்டத்திலிருந்து சிறிதளவும் மீறாத செவ்விய வாழ்க்கை — இந்தச் சொற்களே அவர்களுடைய தாரக மந்திரங்கள்.

கரடுமுரடான போக்கு, எடுத்தேன் கவிழ்த்தேன் என்பது போன்ற நடவடிக்கை, வெடி போடுவதுபோன்ற சொற்கள் — இப்

படிப்பட்ட பண்பாடுகளுக்கு உரியவர்களா அவர்கள்? இல்லை — இல்லை. எந்தச் செய்கையையும் நின்று நிதானித்து, அலசி ஆராய்ந்து, எவருடைய உள்ளத்தையும் புண்படாத முறையில் நடத்திக் காட்டுகின்ற நற்பண்பு படைத்தவர்கள் அந்த நல்லவர்கள்.

ஆக்ரோஷமான சொற்கள்? — அவர்களுக்குப் பிடிக்காது. ஆத்திரத்தையூட்டும் நடவடிக்கை? — அவர்கள் அறியாதது. சத்யாக்கிரகம், மறியல் போராட்டம், இத்யாதி, இத்யாதி?- அவற்றையெல்லாம் அவர்கள் கையாள்வதே கிடையாது.

அவர்கள் அமைதியின் சின்னங்கள். பொறுமையின் உருவங்கள். கட்டுப்பாடு, கண்ணியம் ஆகிய சொற்களின் நடமாடும் அடையாளங்கள்.

அவர்களுடைய துயரம் அளவு கடந்தது. யாராலும் பொறுக்க முடியாதது. கேட்பவர் உள்ளத்தை அனலிடை மெழுகென உருக்கிடத்தகுந்தது. என்றாலுங்கூட அவர்கள், இன்றைய தினம் வரையில், தங்களுடைய எல்லை கடந்த துயரங்களைக்கூட, சற்று உரத்த குரலில்கூட எடுத்துக் கூறியதில்லை.

பண்டங்களின் விலைகள் பாமர மக்களால் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் பறக்கும் காலம் இது. வாழ்க்கைச் செலவுகள் சற்று பண வசதி உள்ளவர்களால் கூட சமாளிக்க முடியாத அளவுக்கு ஓங்கி வளர்ந்திருக்கிற விசித்திர சகாப்தம் இது. விறகா — குண்டு, விலை ரூபாய் இரண்டு! நல்லெண்ணெயா — வீசை ரூபாய் இரண்டரை! மிளகாயா — வீசை ரூபாய் மூன்று என்று எதை எடுத்தாலும் அதிக ரூபாய்க்கணக்கிலேயே அதிசய விலை கூறப்படுகிற நூற்றாண்டு இது. இப்படிப்பட்ட காலத்தில், அன்று இடியோசைகளைக் கிளப்பிய அந்தப் பரிதாபத்திற்குரியவர்களின் ஊதியமோ மாதம் ரூபா இருபது — இருபத்தைந்து — முப்பது — முப்பத்தைந்து — இவ்வளவுதான்.

துரும்பளவு உள்ள இந்த ஊதியத்தைக் கொண்டுதான், அவர்கள் மாபெருங் கடலளவு உள்ள வாழ்க்கையில் நீந்திக் கரையேற வேண்டும். மிகவும் கடினமான காரியம் — எவ்வளவு உறுதி படைத்த உள்ளத்தையும் உடைந்து போகும்படி செய்துவிடக்கூடிய காரியம் — ஆனால் அவர்கள் மிகவும் பொறுமை உடையவர்களாக இருந்த ஒரே காரணத்தால், எவராலும் தாங்கமுடியாத இந்தச் சுமையையும் எப்படியோ இன்றுவரை தாங்கிக்கொண்டு இருந்திருக்கிறார்கள்.

தங்களுடைய தாங்க முடியாத வாழ்க்கைச் சுமையைக் கண்டு மனமிரங்கி, ஆட்சியாளர்கள், அவர்களாகவே பார்த்து, தங்களு

டைய ஊதியத்தை உயர்த்தி, தங்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக மாற்றி, தங்கள் குடும்பங்களை யெல்லாம் வறுமையெனும் படுபாதாளத்திலிருந்து கரையேற்றி விடுவார்கள் என்று அவர்கள் எதிபார்த்துக் கொண்டிருந்தார்கள் நெடுங்காலமாக.

இந்த எண்ணத்தோடுதான் ஆரம்ப ஆசிரியர்கள், முழு அமைதியைக் கடைப்பிடித்திருக்கிறார்கள் இது நாள் வரை.

அவர்களுடைய ஊதியம் மிகமிகக் குறைவானது — இதை யாரும் மறுக்க முடியாது. நம் நாடு உருப்பட வேண்டுமானல் அந்த ஊதியம் உடனடியாக உயர்த்தப்பட்டாக வேண்டும். இதையும் யாரும் மறுக்க முடியாது. என்ருலுங்கூட அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி, இதுவரை சின்னஞ்சிறு ஆர்ப்பாட்டமும் செய்ததில்லை: துளியளவு கிளர்ச்சியும் புரிந்ததில்லை. தப்பித்தவறிக்கூட ஒரு மறியல், ஒரு சத்யாக்கிரகம், ஒரு வேலை நிறுத்தம் — இவற்றை அவர்கள் செய்ததில்லை. செய்யவேண்டும் என்று விளையாட்டுக்காகக்கூட, வெறும் கனவில்கூட, அவர்கள் கருதியதில்லை.

தாங்கள் வலியுறுத்தாமலே தங்களுக்குரிய நியாயத்தைத் தாராளமாக வழங்குவார்கள் ஆட்சியாளர்கள் என்பதிலே அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை! அவ்வளவு உறுதி!

ஆனால் அந்த நம்பிக்கை வீண் போய்விட்டது. அவர்கள் எண்ணியது நடைபெறவில்லை. அவர்கள் எதிர்பார்த்தது உருவாகவில்லை. ஊதியம், சிறிதளவும் உயரவில்லை. அவர்களுடைய வறுமை, வேதனை, துயரம், கண்ணீர் துளியளவும் துடைக்கப்படவில்லை ஊராளவந்தவர்களால்.

நீண்ட காலம் காத்திருந்தும் பலன் எதுவும் கிட்டாமற்போகவே அந்தக் கல்வியிற் சிறந்த கண்ணியவான்கள், இப்போதுதான், ஆட்சியாளர்களுக்குத் தங்களுடைய பரிதாப நிலையை, சற்று உரத்த குரலில் தெரிவிக்கவேண்டியது அவசியம், என்கிற புதிய முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இப்போதுங்கூட, இந்தப் புதிய முடிவுக்கு, இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள் வந்துவிடவில்லை. கல்கத்தா நகரத்து ஆரம்ப ஆசிரியர்கள் மட்டும்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

தங்களுடைய பரிதாப நிலைமையை ஆட்சியாளர்களுக்கு அறிவிப்பதற்காக, கல்கத்தா நகரத்தில் உள்ள எட்டாயிரம் ஆரம்ப ஆசிரியர்களும், அவர்களுடன் பல செகண்டரிபள்ளி ஆசிரியர்களும், ஒன்றாகக் கூடி, ஒரு மாபெரும் ஊர்வலமாகத் திரண்டு, பட்டினிப்

பட்டாளம் பாரீர்-பாராள்வோரே-எங்கள் கண்ணீரைத் துடைத்திட வாரீர் என்று செப்பியபடி கல்கத்தா வீதிகளில் பவனி வந்திருக்கின்றனர்.

பவனி வருவதன் மூலமாக மட்டும் தங்கள் கோரிக்கை நிறைவேறும் என்று அவர்கள் கருதவில்லை. நேரே மந்திரிமார்களையே கண்டு தங்கள் குறைகளைத் தெரிவித்துப் பரிகாரம் தேடியாக வேண்டும் என்று ஒரு முடிவு செய்தனர். எட்டாயிரம் பேரும் அப்படியே ஒரு மகத்தான ஊர்வலமாகச் சென்றனர் சட்டசபையை நோக்கி.

சட்டசபையை அடைந்ததும், அந்த ஆசிரியர்களின் தலைவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பேட்டிக்காண வேண்டுமென்றும், தங்கள் துயரங்களை நேரிலேயே அவரிடம் தெரிவிக்க வேண்டுமென்றும் பணிவுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொண்டார்களாம். "அவர்கள் கேட்பது முற்றிலும் நியாயம்—தயவுசெய்து போய்ப் பாருங்கள் அவர்களை—காது கொடுத்துக் கேளுங்கள் அவர்கள் குறைகளை" என்று சட்டசபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எவ்வளவோ வலியுறுத்தியுங்கூட காங்கிரஸ் முதலமைச்சர் திருவாளர் பி. ஸி. ராய் சபை மண்டபத்தை விட்டு வெளியே வந்து, ஆசிரியர்களின் ஊர்வலத்தை நேரில் காணவும், அந்த அமைதியின் சின்னங்கள் கூறக் கூடிய வார்த்தைகளைச் செவி கொடுத்துக் கேட்கவும் முடியவே முடியாது என்று திட்ட வட்டமாக மறுத்து விட்டாராம். உடனே, "முதலமைச்சரின் போக்கை நாங்கள் முற்றிலும் வெறுக்கிறோம்—ஆசிரியர்களை நேரில் சென்று காண்பதே நியாயம்—ஆனால் காண மறுக்கிறார் நாட்டின் பிரதமர்—ஆகவே அவருடைய போக்கைக் கண்டிக்கும் அறிகுறியாக நாங்கள் சட்டசபையை விட்டு வெளியேறுகிறோம்" என்று கூறிக் கொண்டே, சட்டசபையில் உள்ள காங்கிரஸ் அல்லாத ஏனைய கட்சிகளின் எம். எல். ஏ.க்கள் அனைவரும் சபையை விட்டு வெளியேறி விட்டனராம்.

பத்திரிகைகளில் வெளி வந்திருக்கிறது இந்தச் செய்தி.

மேற்கு வங்காள காங்கிரஸ் பிரதமர் திருவாளர் பி. ஸி. ராய் நடந்துகொண்டிருக்கிற முறை முற்றிலும் தவறானது என்பதை எவரும் மறுக்க முடியாது.

வறுமையால் வாடிடும் ஆசிரியர்களின் துயரத்தைக் குறைத்திட அவர்கள் கேட்காமலே முன் வந்திருக்கவேண்டியது திருவாளர் பி. ஸி. ராயின் கடமை-அந்தக் கடமையை அவர் செய்யவில்லை—

செய்யாவிட்டால் போகட்டும்—ஆசிரியர்களாக முன் வந்து தங்கள் குறைகளைக் கூறத் தொடங்கிய போதாவது, அவர்களை அன்புடன் கண்டு, கனிவுடன் பேசி, அவர்கள் குறைகளை மனமுவந்து கேட்டு அறிந்திருக்க வேண்டாமா அமைச்சர்?

குறைகளைத் தீர்க்கிறாரா அல்லவா—அதுகூட வேறு பிரச்சினை. ஆனால், "நம்முடைய பிரதமர் இருக்கிறார்—அவரிடம் கூறலாம் நம்முடைய குறைகளை—நிச்சயம் கேட்பார்"—என்று எண்ணி ஆவலோடு வந்த ஆசிரியர்களை பரியாதைக்காகக் கூட நேரில் பார்க்காமல் உள்ளேயே இருந்து விட்டாரே முதலமைச்சர் பி. சி. ராய், இது நியாயமா? கண்ணியமான முறையா இது? தன்னைக் காணவேண்டுமென்று ஓடோடி வந்த மக்கட் குழுவினரைக் காண முடியாது—முடியாது, முடியாது என்று கூறுவதுதான் மக்களாட்சியின் பண்பாடா? இதுவா ஜனநாயகம்? இதற்குப் பெயரா மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் அரசாங்கம்? உள்ளம் உடைந்து கிடக்கும் சென்னை மாகாண ஆரம்ப ஆசிரியர்கள் சார்பில் கேட்கிறோம், ஒரு காங்கிரஸ் பிரதமரே ஆசிரியர்கள் குழுவிடம் இப்படி நடந்து கொண்டால், காங்கிரஸ் கட்சியையே வெறுத்துத் தள்ள வேண்டும் என்கிற எண்ணம் ஏற்பட்டு விடாதா ஆரம்ப ஆசிரியர்களுக்கு?

வேறு எது எப்படியிருந்தாலும் சரி. கல்கத்தா குமுறல், முக்கியமான ஓர் உண்மையை, மிகத் தெளிவாக எடுத்து விளக்கி விட்டது.

ஆரம்ப ஆசிரியர்களின் பொறுமைக்குக்கூட ஓர் அளவுண்டு—இனியும் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் அவர்கள்—தங்கள் உரிமைகளுக்காகக் கிளர்ச்சி புரியவும் போராட்டம் நடத்தவும் இனி அஞ்ச மாட்டார்கள் அவர்கள் என்பதுதான் அந்த உண்மை.

ஆம்! "கல்கத்தா" சம்பவம்— ஓர் அபாய அறிகுறி! பொறுமையையே அணிகலனாகக் கொண்ட ஆரம்ப ஆசிரியர்கள்கூட, போராட்டப் பாதையில் புகுந்திடக் கூடும் என்பதை விளக்குகிற அபாய அறிகுறி!!

சென்னை இராஜ்ஜிய எயிடட் எலிமெண்டரி பாடசாலை, மானேஜர்கள் — ஆசிரிய மானேஜர்கள்

நான்காவது மாநாடு ஒத்திவைப்பு

எவ்வளவு நியாயமான இலட்சியமாக இருந்தாலும் சரி, அந்த இலட்சியத்தின் பக்கம் போதுமான பலம் சேர்ந்தாலொழிய அந்த இலட்சியம் வெற்றிபெறுவது கிடையாது. இது உலக வரலாறு, அதன் ஒவ்வொரு பக்கத்தின் மூலமும் தெரிவித்துக்கொண்டிருக்கும் உண்மை. இந்தப் பொதுவிதியிலிருந்து ஆசிரிய மானேஜர்களுக்கோ, மானேஜர்களுக்கோ எவ்வித விலக்கும் கிடையாது. அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமானவைதான். ஆட்சியாளர்களால் அவசியம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவைதான். ஆனாலும்கூட, அவர்களெல்லாம் உரத்த குரலில் தங்களுடைய உரிமைக் குரலை எழுப்பினாலொழிய, ஆட்சியாளர்கள் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஒரு நாளும் செவிசாய்க்க மாட்டார்கள்.

ஆகவே, எயிடட் மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் ஆகியோரின் நான்காவது மாநாடு விரைவில் நடைபெற வேண்டியதுதான் என்பதில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருக்கமுடியாது.

ஆனால், மாநாட்டை நடத்துவதற்குத் தேவையான பக்குவமான சூழ்நிலை தற்போது இருகிறதா என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால், இல்லை என்கிற முடிவுக்கே எவரும் வந்துதீர வேண்டும். சென்னை ஆட்சியாளர்களும் சரி, டில்லி ஆட்சியாளர்களும் சரி, ஆந்திர மாகாணத்தை அமைப்பது சம்பந்தமான மிகச் சிக்கலான பிரச்சினைகளில் தங்களுடைய நேரத்தையும் கவனத்தையும் பறிகொடுத்துவிட்ட நேரம் இது. அவர்களுடைய எண்ணம் முழுவதும், புதிய மாகாணத்தைஅதிக சங்கடமின்றி எப்படி அமைப்பது என்கிற அந்த ஒரு பிரச்சினையிலேயே ஈடுபட்டிருக்கிறது. இப்படிப் பட்ட நேரத்தில் நாம் நம்முடைய கோரிக்கைகளை எழுப்பினால் அது சுருதியில் சேராத சங்கீதம் போலவும், செவிடன் காதில் ஊதிய சங்கு போலவுமே முடியும்.

தற்போது கல்வி அமைச்சராக விளங்கும் திருவாளர் எம். வி. கிருஷ்ணாராவ் அவர்கள் ஓர் ஆந்திரர். ஆகவே, அவருடைய உள்ளம் ஆந்திர மாகாணப் பிரச்சினையிலே அதிகமாக ஈடுபாடு கொண்டிருப்பது இயற்கை. அதுவுமல்லாமல், சென்னை மேல் சபையில் உள்ள அவருடைய உறுப்பினர் பதவியும் செல்லாது என்பதாக அண்மையில் தேர்தல் டிரிபுனல் தீர்ப்பளித்துவிட்டிருக்கிறது. ஆகவே, அவருடைய மந்திரிப் பதவியேகூட இனி நீடிக்க முடியுமா என்கிற பிரச்சினை இப்போது ஏற்பட்டுவிட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் நாம் நம்முடைய பிரச்சினைகளை அவரிடம்

கொண்டு சென்றால், அதனால் நற்பலன் ஏதாவது விளையுமா என்பது முற்றிலும் சந்தேகப்படக்கூட வேண்டிய செய்திதான்.

இதுவுமல்லாமல் மற்றொரு விஷயத்தையும் நாம் இச்சமயத்தில் கவனித்தாக வேண்டும். புதிய ஆந்திர மாகாணம் ஏற்பட்டுவிடுமானால் அதன் பிறகு நம்முடைய மாநாடு, ஆந்திரப்பகுதி நீங்கிய எஞ்சிய தமிழ் நாட்டிற்கு மட்டும்தான் பொருந்தியதாக இருக்க முடியும்.

இச்சூழ்நிலைகள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது, ஆந்திர மாகாணம் அமைந்த பிறகும், எஞ்சிய சென்னை மகாணத்திற்குப் புதிய கல்வி அமைச்சர் ஏற்பட்ட பிறகும், நம்முடைய மாநாட்டை நடத்துவதுதான் சாலச் சிறந்தது என்கிற முடிவு ஏற்படுகிறது.

எனவே, சிறிது காலத்திற்கு நம்முடைய மாநாடு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது என்பதை சம்பப்பட்ட அனைவருக்கும் அன்புடனும் பணிவுடனும் தெரிவித்துக்கொள்கிறோம்.

P. வீரராகவன்

பொதுக்காரியதரிசி
(ஆசிரியர், ஆரம்பக்கல்வி)

நமது பாட புத்தகங்கள்

சென்ற ஆண்டு நமது வேண்டுகோளுக்கு இணங்கி, பல எயிடட், பஞ்சாயத், லேபர், ஆரம்பப் பாடசாலை தலைமையாசிரியர்களும், மானேஜர்களும், நமது புதுமுறை சங்க வாசகங்களையும்; இதர பாட புத்தகங்களையும் ரூபாய் 50-க்குக் குறையாமல், புத்தகங்களை வைத்து, ஆதரித்து, அவர்கள் நமது பத்திரிகையை இனமாக அனுப்பியதை வாசித்து வருவதைக்காண மிக மகிழ்ச்சி அடைகிறோம். அவர்களுக்கெல்லாம் நமது அன்பு கலந்த நன்றியறிதலையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அம்மாதிரியே இவ்வருடமும் (1953-54) நமது பாட புத்தகங்களை தொடர்ந்து வைத்து ஆதரிப்பதோடு நின்றுவிடாமல், இன்னும் அக்கம் பக்கத்திலுள்ள பல எயிடட், பஞ்சாயத், லேபர், மிஷன், பாடசாலைகளிலும், நமது புத்தகங்களை வைக்க முயற்சிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நமது பாட புத்தகங்களை, தொடர்ந்தாற்போல், 1953-54-க்கு வைத்துக்கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், மானேஜர்கள் 31-4-53க்குள் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, சென்னை அலுவலகத்திற்கு முன்பாகவே தெரிவித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட பாட புத்தகத்தை இரண்டு வருடங்களுக்குள் மாற்றக்கூடாதேயொழிய, 2 வருடங்களுக்கு மேல் எத்தனை வருடங்களுக்கு வேண்டுமானாலும் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்.

மாதிரிப் பிரதிகள்

மாதிரிப் பிரதிகள் வேண்டுபவர்கள் தாங்கள் எந்தெந்த வகுப்பிற்கு என்னென்ன புத்தகங்கள் மாற்ற விரும்புகிறார்களோ, அவைகளுக்கு மட்டும் தேவையான தபால் பில்லைகளை வைத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம். முழு விளக்கத்தையும் பத்திரிகையின் மேல், உள், அட்டைகளில் கொடுத்திருக்கின்றோம், அதன்படி தபால் பில்லைகளை அனுப்பி வைக்கவும்.

ஒன்று முதல் 5 வகுப்பு வரையில் எல்லாப் பாடங்களுக்கும் சுமார் 23 புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுபவர்கள் ரூ.3-8-0 M. O. அனுப்பவும். அப்பொழுதுதான் 23 புத்தகங்களையும் Registered Book Post-ல் அனுப்பிவைக்கப்படும்.

ஒவ்வொரு பாடசாலையிலும், தலைமை ஆசிரியர் அல்லது மானேஜர் கையொப்பமிட்டு, பாடசாலை முத்திரை போட்ட, அல்லது அச்சடித்த கடிதங்களுக்கே புத்தகங்கள் அனுப்பிவைக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், ஒரு பாடசாலைக்கு இரண்டு முறை மாதிரி காப்பிகள் அனுப்பப்படமாட்டாது. மாதிரி பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகள் எல்லாம் காரியாலயத்தில் ஜில்லாவாரியாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வருகின்றன. ஆதலால், இரண்டாவது முறையாகக் கேட்கும் மாதிரிப் பிரதிகளுக்காக அனுப்பப்படும், ஸ்டாம்போ, பணமோ தபால் செலவைக் கழித்துக்கொண்டு, திருப்பி அனுப்பிவைக்கப்படும்

5—3—'53

மானேஜர்,

ஆரம்பக்கல்வி ஆபீஸ்

மதறாஸ்.

அறிவுக் கதிர்

காதல் திகழும் இடத்தில் வீரம் செறியும், வீரம் செறியும் இடத்தில் காதல் திகழும். அஃது இல்லாத இடத்தில் இஃது இராது. இஃது இல்லாத இடத்தில் அஃது இராது. காதலின் தொடர்ச்சி வீரம். வீரத்தின் அடிப்படைக் காதல்.

—திரு. வி. க.

நெல்லிக் கனி

மயிலை சீனி. வேங்கடசாமி

நமக்குக் கிடைக்கிற நெல்லிக் கனியைப் பற்றிப் பண்டைக் காலத்துத் தமிழ் மருத்துவ நூலாகிய ஆயுர்வேதத்திலும், வடமொழி மருத்துவ நூலாகிய ஆயுர்வேதத்திலும், இஸ்லாமிய மருத்துவ நூலாகிய யூனானி வைத்திய நூலிலும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. தற்போது மேல் நாட்டு சயன்ஸ் என்னும் முறைப்படி ஆராய்ச்சி செய்த மேலை நாட்டு கீழை நாட்டு வைத்திய ஆராய்ச்சியாளரும் நெல்லிக் காயின் சிறப்பைப் புகழ்ந்துள்ளார்கள்.

நெல்லிக்கனியில் இரத்தத்திற்கு உரம் அளிக்கிற உயிர்ச் சத்து (ஜீவ சத்து) அதிகமாக இருக்கிறது என்று இப்போது ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இரத்தத்திற்கு உரம் அளிக்கிற உயிர்ச்சத்திற்கு ஆங்கில மொழியில் சி வைட்டமின் (Vitamin C) என்பது பெயர். இரத்தம்தான் தேக சுகத்திற்கு மூலாதாரம். இரத்தம் நன்னிலையில் இல்லாமற் போனால் பலவித நோய்கள் ஏற்படும். இரத்தத்திற்கு உரம் அளித்து, அதை நன்னிலையில் வைக்கிற பழ வகைகள் சில உண்டு. அவை எலுமிச்சம் பழம், ஆரஞ்சிப் பழம், சாத்துக்குடிப் பழம், அனுசிப் பழம், நெல்லிக் கனி முதலியவை. எலுமிச்சம் பழத்தைவிட ஆரஞ்சிப் பழத்திலும், சாத்துக்குடிப் பழத்திலும் அதிகமான ஜீவ சத்து (Vitamin C) உண்டு. ஆனால் ஆரஞ்சு, சாத்துக்குடிப் பழங்களைவிட அதிகமாக மூன்று பங்கு அதிகமாக, ஒரு நெல்லிக்கனியில் இந்த ஜீவ சத்து உண்டு! அதாவது ஒரு நெல்லிக்கனி மூன்று சாத்துக்குடிப் பழத்திற்குச் சமானம் ஆகும். மூன்று சாத்துக்குடிப் பழத்தை அருந்தினால் எவ்வளவு இரத்த சுத்தி பெறுவோமோ அவ்வளவும் ஒரு நெல்லிக்கனியைச் சாப்பிட்டால் பெறமுடியும். இது விஞ்ஞான முறைப்படி வைத்திய ஆராய்ச்சியாளர் கண்ட உண்மை.

நமது நாட்டு ஏழை எளியவர்கள் நெல்லிக்காயை ஊறுகாய் போட்டுச் சாப்பாட்டுடன் உண்பது வழக்கம். செல்வர்களும், சீமான்களும் இந்தக் காயைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்கள். ஆனால் இப்போது இது மிக உயர்ந்த பொருள் என்பதை, ஆரஞ்சுப் பழத்தைவிட மிக மேலான பொருள் என்பதை, இரத்தத்திற்கு உரமளிக்கிற ஜீவ சத்து (Vitamin C) உள்ள பொருள் என்பதை எல்லோரும் உணர்ந்து கொண்டார்கள். இப்போது நெல்லிக்கனியின் சிறப்பு

"உள்ளங்கை நெல்லிக்கனி" போலத் தெரிகிறது அல்லவா?

முகம்மதிய (யூனனி) வைத்திய நூல்களில் நெல்லிக்கனியைப் பற்றிச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மூளை, இருதயம், ஈரல், இரைப்பை என்பவை முக்கிய மான உறுப்புக்கள் ஆகும். இவை நன்னிலையில் இருந்தால் தேகம் சுகம் நன்றாய் இருக்கும். இந்த உறுப்புகளுக்கு இராஜ கருவிகள் என்று யூனனி மருத்துவர் கூறுகின்றனர். மூளை, இருதயம், இரைப்பை இம் மூன்றிற்கும் நெல்லிக்கனி உரம் அளிக்கிறது. என்று யூனனி மருத்துவ நூல்கள் கூறுகின்றன. இந்த உறுப்புகள் சம்பந்தமான நோய்களுக்கு நெல்லிக்காயை உபயோகப்படுத்துகிறார்கள்.

நெல்லிக்காயைப் பகற்காலத்தில் உண்ணவேண்டும். இரவில் உண்ணக்கூடாது. நெல்லிக்காய் பித்தத்தை நீக்கும். நெல்லிப் பழத்தின் புளிப்பு வாதத்தை (வாயுவை) நீக்கும். அதன் துவர்ப்பு கபத்தை அகற்றும். மேகநோய் நீங்கும் என்று தமிழ் வைத்திய நூல் கூறுகிறது:

நெல்லிக்காய்க்குப் பித்தம் நீங்
    கும்; அதன் புளிப்பால்
செல்லுமே வாதம்; அதிற் சேர்
    துவரால் — சொல்லும் ஐயம்
ஓடும்; இதைச் சித்தத்தில் உன்ன
    அனலுடனே
கூடு பிற மேகமும் போங் கூறு.

நெல்லிக்காய் வற்றலுக்கு நெல்லி முல்லி என்பது பெயர். இதுவும் மருந்துக்கு உபயோகப் படுகிறது.

நல்ல நெல்லி முள்ளியது நாக்
    குக்கு ருசிதரும்,
அல்லல்விரி பித்தம் அகற்றும்
    அதை— மெல்லத்
தலைமுழுகக் கண்குளிரும் தாவு
    பித்த வாந்தி
இலையிழிமேகங்களும்
    போம் எண்.

நெல்லி வற்றலும் (நெல்லி முள்ளியுடன்) வேறு பல மருந்துச் சரக்குகளைச் சேர்த்துத் தைலம் காய்ச்சித் தேய்த்துத் தலை முழுகினால், கண்ணைப் பற்றிய வியாதிகளும் பித்த வெட்டை, பித்த வாயு, உடம் பெரிவு, பித்த மயக்கம் முதலிய நோய்கள் தீரும். அதுபோலவே, நெல்லி முள்ளி இலேகியத்தினால் வாத பித்த தோஷங்கள், காமாலை, பித்தப்பாண்டு, திமிர் வாயு, சோகை, பித்த குன்மம் முதலிய நோய்கள் தீரும்.

சியவனப்பிராச ரசாயனம், ஆமலக லேகியம், ஆமலக கற்பம், ஆமலகக் கிருதம் முதலிய பல மருந்துகள் நெல்லிக்காயிலிருந்து செய்யப்படுகின்றன. இம் மருந்துகளில் சியவனப் பிராசலேகியம் பேர்போனது. இது நுரையீரலுக்குப் (சுவாசப் பைக்கு) பலங் கொடுக்கிற நல்ல மருந்து. நுரையீரல் சம்பந்தப்பட்ட க்ஷயம் முதலிய நோய்களுக்குச் சியவனப்பிராச லேகியம் கொடுப்பது நமது நாட்டு வழக்கம். சியவனப்பிராச லேகியத்தைத்

தொடர்ந்து பல காலம் சாப்பிட்டு வந்தால் ஆயுள் வளரும் என்பர்.

நெல்லிக்காயைப் பழப்பாகு செய்து சாப்பிடலாம். இதை நெல்லிக்காய் முறப்பா என்று கூறுவர். இதைச் செய்யும் முறை வருமாறு :—

நன்றாய் முற்றினதும் ஆனால் பழுக்காததுமான நெல்லிக்காய்களை எடுத்துக்கொள்ள வேண்டும். நார் அற்ற சதைப்பற்றுள்ள காயாக இருப்பது நல்லது. இந்தக் காய்கள் ஒவ்வொன்றையும் முட்களால் நன்றாகக் குத்த வேண்டும். ஊசியினாலும் ஆணியினாலும் குத்துவது கூடாது. ஈச்சன் முட்களைச் சிறு கத்தையாகக் கட்டி அதனால் குத்தலாம் அல்லது பலமுள்ள வேறு முட்களினால் குத்தலாம். குத்தின காய்களைச் சுண்ணாம்பு நீரில் ஒரு நாள் ஊறவைத்துப் பிறகு கழுவி எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு காயை மண் பாத்திரத்தில் போட்டு நீர் சுண்டின பிறகு காயை நெய்யில் வறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். காயின் எடைக்கு இரண்டு பங்கு சர்க்கரையைப் பாகு காய்ச்சி அதில் காயைப்போட்டு வேக வைத்து நல்ல பாகுபதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவேண்டும். சில நாட்களுக்குப் பிறகு இந்தச் சர்க்கரைப் பாகு நீர்த்துக் காணப்படுமானால், காய்களை எடுத்துக்கொண்டு, பாகை மட்டும் அடுப்பில் வைத்து அதனுடன் சிறிது சர்க்கரை சேர்த்துக் காய்ச்சி அதில் காயைப்போட்டு பத்திரப் படுத்தவேண்டும். இது தான் நெல்லிப்பழப் பாகு. இதை யூனானி மருந்துக் கடைகளில் நெல்லிக்காய் முறப்பா என்று விற்கிறார்கள். இந்தப் பழத்தில் 3, 4 பழம் சாப்பிட்டு வந்தால், இரைப்பை, இருதயம், மூளை இவ்வுறுப்புகளைப் பலப்படுத்தும். ஜீரண சக்தியுண்டாகும்.

நெல்லிக்காய் எந்தக் காலத்திலும் கிடைக்காது. ஆண்டுதோறும் சில மாதங்களில் மட்டும் கிடைக்கும். ஆகவே இதை ஊறுகாய் செய்து வைத்துக் கொள்வது நல்லது. காயை உரலில் இட்டு இடித்துக் கொட்டை நீக்கி அதனுடன் இஞ்சி, பச்சை மிளகாய், உப்பு சேர்த்து ஊறுகாய் செய்து கொள்வதும் உண்டு. எண்ணெயில் இட்டு ஊறுகாய் போடுவதும் உண்டு. வெறும் உப்பு இட்டு ஊறுகாய் செய்வதும் உண்டு. ஆனால் காய்ந்த நெல்லிக் காயைவிட, உலராத பழுத்த நெல்லிக்காயில் தான் இரத்தத்திற்கு உரம் அளிக்கும் ஜீவ சத்து (Vitamin C) அதிகம் உண்டு.

(சௌபாக்கியம்)

சென்ற இதழ் தொடர்ச்சி —

கிராமச் சீரமைப்பும் குடிசைத் தொழிலும்

By. J. Russaliah B. A. Rural welfare offiicer Tiruvellore (Copyright by the Publisher)

மேலும் கிராமச் சீரமைப்புத் திட்டம் ஒன்று தயார் செய்ய வேண்டுமெனின் கிராமங்களைக் குறித்த உண்மை நிலை அறிய வேண்டும். அதற்கு ஆராய்ச்சி வேண்டும். ஆராய்ச்சி நடத்தும்போது பல கிராமங்களின் தன்மைகள், சக்திகள், ஒழுக்கங்கள், முறைமைகள், பழக்க வழக்கங்கள் ஒன்றுபோல் காணப்படலாம். அவைகளை அடிப்படையாகக் கொண்டுதான் அந்த இடத்திற்கு ஏற்ப திட்டம் அமைத்தல் வேண்டும். அவ்விதம் திட்டம் ஏற்படுத்துகின்றபோது ஒவ்வொரு கிராமத்தையும் ஒவ்வொரு கிராமவாசியையும் திட்டத்தில் கொண்டுவரவேண்டும். அந்தக் கிராமங்களில் வாழும் எந்த நபரும் அந்தத் திட்டத்தில் இடம் பெறவேண்டும். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இருத்தல் கூடாது.

'கிராமங்கள்' 'கிராமச் சீரமைப்பு' 'கிராமச் சீர்திருத்தம்' என்னும் வார்த்தைகளின் பேரொலி அதிகமாகக் கிளம்பி இருந்த போதிலும் உண்மையில் கிராமப்பற்று உடையோர் மிகச் சிலர். காரணம் யாதெனில் கிராம வாழ்க்கையைக் குறித்த திட்ட வட்டமான அறிவு அவர்களுக்கு இல்லை என்பதும் மிகையாகாது. மேலும் கிராம சீரமைப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்களை ஏளனம் செய்வதற்கும் அதுவே காரணமாகும். உண்மையை அவர்களுக்கு விளக்கிக் காட்டுவோமாயின் அவ்வாறு செய்யமாட்டார்கள். ஜில்லா போர்டு போன்ற பொதுநல மன்றங்களும், பல பொதுநல சேவை செய்வோரும் மற்றும் பெரியோர்களும் தங்கள் கடமைகளில் பல காரியங்களை விட்டுவிடுவதற்கும் இதுவே காரணம்.

குடிசைத் தொழில்கள் கிராமங்கள்தோறும் ஒரே மாதிரியாக இருக்கமாட்டா. சில கிராமங்களில் மிகச் சுலபமாகச் செய்யக்கூடிய குடிசைத் தொழில்கள் வேறு பல கிராமங்களில் செய்ய வகையிராது, சில கிராமங்களில் குடிசைத் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் இயற்கையாகவே கிடைக்கும். இன்னும் சில கிராமங்களில் அவை கிடையா. சில கிராமங்களில் பனை மரங்கள் ஏராளமாக வளரும். ஆக அங்கு பனையோலை பாய்கள், கூடைகள் செய்தல், விசிறி செய்தல் முதலியன ஏற்ற தொழில்களாகும். ஆகவே எந்தெந்த கிராமங்களில் என்னென்னசெய்கிறார்கள்;எவ்வாறுசெய்கிறார்கள் என்பதுபற்றித் தெளிவாக அறிதல் வேண்டும். அதன் பின் நாம் அவைகளை அபிவிருத்தி செய்யும் முறையைத் தேடவேண்டும். இன்

லும் புதிய குடிசைத்தொழில்களில் அந்தக் கிராமத்திற்கு ஏற்றவை எவை என்பதை ஆராய்தல் வேண்டும். இக்காரணங்கள் பற்றிப் பொருளாதார ஆராய்ச்சி தேவை என்பது நன்கு விளங்கும்.

கிராம சீரமைப்பு இயக்கத்தில் ஊரிலுள்ள எல்லோரும் ஈடுபடல் வேண்டும். ஆண், பெண், சிறுவர், சிறுமியர் முதலியோர் எவரும் கலந்துகொள்ளல் வேண்டும். தரித்திரம் இடையூறாக இருத்தல் கூடாது. அதற்கேற்பத் திட்டம் வகுக்கவேண்டும். எல்லா மக்களுக்கும் பொருந்தும்படி எல்லா மக்களாலேயே அமையவேண்டும். எவ்வித சாதி சமய வேற்றுமை உடையோருக்கும் இடம் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும். இவ்வாறு திட்டம் வகுக்க வேண்டின் பொருளாதார ஆராய்ச்சி வேண்டும். இவ்வித ஆராய்ச்சி முக்கியமாகக் கருதப்பட்ட போதிலும் கவலையின்றி விடப்பட்டிருக்கின்றது. முன்னாளில் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒருவித எண்ணங்களையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு போகிறார்களே அன்றி அவைகளின் உண்மை விளக்கம் அறிய முயற்சி செய்யப்படவில்லை. பட்டணங்களைக் குறித்த சில புள்ளி விபரங்கள் தெரியுமே தவிர கிராமங்களைப் பற்றித் திட்ட வட்டமாகச் சொல்ல முடியாது. கிராமங்களில் விவசாயம் எவ்வாறு நடத்தப்படுகிறதென்றும், ஊருக்கு ஊர் உள்ள வேற்றுமை ஒற்றுமைகள் எவை யென்றும் கிராமவாசியின் இன்னல்கள், இன்பங்கள் இலாப நஷ்டங்கள், நோய்கள், பிணிகள் முதலியன பற்றி ஒன்றும் திட்டமாகத் தெரியாது. இந்தியர்கள் நம் நாட்டு மக்கள் என்றால் நகரங்களில் வசிக்கும் ஒரு சிலர் மட்டும் அல்ல. நம் நாட்டுப் பொருளாதார நிலை என்றால் நம் கிராமங்களிலுள்ள கிராம மக்களது நிலையைக் குறித்தல் வேண்டும். அப்படியிருக்க தற்போதைய புள்ளி விவரங்கள் பட்டணங்களையும் நகரங்களில் வாழ்பவர்களது நிலைமையைக் காட்டுகின்றது. ஆக எந்தப் பொருளாதார கலைஞனும் நாட்டுச் சேவை செய்ய முன் வருவோரும் கருதவேண்டியது கிராமங்களைக் குறித்தேயாகும்.

கிராமவாசியின் வருவாயின் வழிகளைக் கவனித்தல் வேண்டும். அவன் தன் பணத்தைச் செலவிடும் வகைகள் அறிதல் வேண்டும். அவர்கள் கடன் பட்டு வாழக் காரணங்கள் எவையெனப் புரிதல் வேண்டும். கஞ்சிக்கும், ஆடைக்கும் அவர்கள் படும்பாடு எத்தகைத்து என்பதை ஆய்ந்து உணரவேண்டும். இக்காரியங்களைக் குறித்து உள்ளபடி நாம் அறிந்துகொண்ட பின்னர் அதற்கு வேண்டும் வகை செய்ய முயற்சித்தல் வேண்டும். ஒரு கிராமத்தின் வருவாய் கொடுக்கும் மூலப் பொருள்களுக்கும் மற்றொரு கிராமத்தின் மூலப் பொருள்களுக்கும் பல வேற்றுமை, ஒற்றுமைகள் உள. ஒரு கிராமத்தினர் தங்கள் பணத்தை வீண் பழக்க வழக்கங்களுக்குச் செலவு செய்வர். இன்னொரு கிராமத்தின் மக்கள் சடங்காசாரங்களுக்குப்

பணத்தை விரயம் செய்வர். ஒரு கிராமத்தில் மக்கள் கடன்படக் காரணம் மழையின்மையாகும். வேறொரு ஊரில் கடனுக்குக் காரணம் தீயினால் ஏற்பட்ட சேதமாக இருக்கும். ஆக திட்டமான ஆராய்ச்சி செய்தால்தான் உண்மை புலப்படும்.

கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் தொடர்பு உண்டு. கிராம மக்கள்தான் நகர மாந்தர்க்கு உணவுப் பொருள் அளிக்கவேண்டும். நகர ஆலைகளுக்கு மூலப் பொருள்கள் கொடுத்துதவுபவர்கள் கிராமவாசிகள். இந்தத் தொடர்பு எந்தெந்த வகைகளில் இருக்கிறதென்பதைத் தெளிவாக அறிதல் வேண்டும். இந்த அறிவு அந்தத் தொடர்பை வலியுறுத்த உதவும். அங்குக் காணப்படும் சுரண்டல்களைத் தவிர்க்க வகை காட்டும்.

அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்ட பல புள்ளி விபரங்கள் உள. அவை முற்றிலும் உண்மை அல்ல என்று ஒரு சிலர் கருதுகின்றனர். அதற்குச் சில காரணங்களும் உள. அரசாங்க அதிகாரிகளிடம் உண்மை கூற அச்சப்படுகின்றனர். உள்ளதைக் கூறினாலும் புதிய வரி ஏற்படுமோ என்ற பயமும் உண்டு. கணக்கெடுப்பவர்களும் உண்மையறிய கவலைப்படுவதில்லை. ஆனாலும் இந்தக் கணக்குகளில் சில உண்மைகள் உள்ளன.

சிலர் இவ்வாறு புள்ளி விபரங்கள் தயாரிப்பதில் பயனில்லை எனக் கருதுகின்றனர். அது ஒப்புக்கொள்ள முடியாது. ஆனால், புள்ளி விபரங்களின் ஏற்றத் தாழ்வு அதைத் தயாரிக்கும் நோக்கம் ஊழியர்களது மனப்பான்மை, அவர்களுக்கும் கிராமங்களுக்கும் உள்ள தொடர்பு முதலியனவற்றைப் பொறுத்திருக்கின்றது. கிராம சேவை செய்ய பெரும் விருப்பமுடையவர்களாக இருத்தல் வேண்டும். விடா முயற்சி ஊக்கம் முதலிய தன்மைகள் உடையவராய் தன்னலம் கருதாது உழைக்க விரும்புபவர் செயல் பலன் தரும். கிராமங்களின் நிலை அறிய ஆவல் உடையோராக இருத்தல்வேண்டும். உண்மை புலப்படவேண்டும் என்ற நோக்கத்தைக் கடைப் பிடித்து பொறுமையுடன் மழையிலும் வெயிலிலும் தாழ்வான இடங்களிலும் அலைய முன் வரவேண்டும். இதை ஒரு பொழுதுபோக்கென மதியாது கிராம மக்களின் நிலையை உள்ளபடி விளக்கவேண்டும். அவர்களுக்கு உதவி புரிய வேண்டும் என்ற மனப்பான்மை வேண்டும். அதிகாரத்தோரணையாக, இவ்வித ஆராய்ச்சி நடத்த முடியாது. அரசாங்க அதிகாரிகள் அல்லாத, கட்சிப் பற்றற்ற நாட்டின் நன்மை கருதி உழைக்கும் பெரியோர் ஆராய்ச்சி செய்வது நன்று.

புள்ளி விபரங்கள் சேகரிக்கும்போது கிராமவாசிகள் பலர் பல வித சந்தேகங்கள் கிளப்பலாம். அவைகளுக்குத் திறமையாகவும், சாதுரியமாகவும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறும் விடை கருதல் வேண்

டும். கிராம மக்களிடம் உள்ளபடி அன்பு கொண்டு அனுதாப
சிந்தையுடன் அவர்களிடம் பழகுதல் வேண்டும். கிராம மக்கள்
நாம் அவர்களிடம் போலித்தனமாக நடக்கிறோம் அல்லது உண்மை
யாக நடக்கிறோம் என்பதை வெகு சீக்கிரத்தில் கண்டுகொள்வார்கள்.
ஆக நாம் அவர்களது நல் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளல் வேண்
டும். அவர்கள் நமது பேச்சு நடை உடை பாவனைகள் முதலியவற்றை
மிக உன்னிப்பாகக் கவனிப்பார்கள். நம்மிடம் சில முரண்பாடுகள்
காணப்படுமானால் அவர்கள் உறுதி குறைந்து போகும். நாம் எந்த
ஊரில் ஆராய்ச்சி நடத்த விரும்புகின்றோமோ அங்குள்ள மக்க
ளுடன் நன்கு பழகுதல் வேண்டும். நாம் உயர்ந்தோர் அவர்
தாழ்ந்தோர் என்னும் மனப்பான்மை இருத்தல் கூடாது. நமது
பெருமைக்கு அல்லது ஊதியம் அடையும் பொருட்டு அல்ல அவர்
களது நன்மைக்கே என்பதை அவர்கள் அறிதல் வேண்டும். கிரா
மத்திலுள்ள பெரியாரிடம் ஆராய்ச்சியின் நோக்கங்களையும் அதனால்
வரும் பயனையும் தெளிவுற எடுத்துக் காட்டல் வேண்டும். ஆராய்ச்சி
யின் தேவைகளைக் குறித்து அவர்கள் நன்கு அறிதல் வேண்டும்.

ஆராய்ச்சி தொடங்குவதற்கு முன் அந்த ஊரிலுள்ள எல்லா
மக்களும் அறியும்படி அவர்களுக்கு ஓர் கூட்டம் ஏற்படுத்த வேண்
டும். அங்கு நடக்கப்போகும் வேலைகளைக் குறித்துத் திட்டமாக
எடுத்துரைக்கவேண்டும். முக்கியமாக அந்த ஊரிலுள்ள பெண்
பாலர் இக் கூட்டத்தில் பங்குகொள்ள வேண்டும். அவர்களுடைய
நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அப்போது அவர்கள்
வேண்டும் உதவி செய்வார்கள். புள்ளி விபரங்கள் சேகரிக்கும்
போது அந்த ஊரிலுள்ள செல்வாக்குடைய ஒரு பெரியாரை பக்கத்
திலிருத்தி அவர்கள் சொல்லும் காரியங்களை ஒத்துக் குறிப்பிடல்
வேண்டும்.

சிலர் கிராமவாசிகளது எழுத்தறிவின்மை இவ்வித ஆராய்ச்சி
நடத்துவதற்குத் தடையெனக் கருதுகின்றனர். ஆனால், அப்படி
எண்ணுவது நியாயம் அன்று. முதல் முதல் பல கேள்விகள் வரும்.
மக்கள் புதுமையாகக் கருதி வேடிக்கை பார்ப்பார்கள். ஆனால், அந்த
கேள்விமுறை (Questioner) முழுவதும் முடிகிறபோது எல்லா
வித சந்தேகங்களும் தப்பு அபிப்பிராயங்களும் நீங்கிப்போகும்.
அதற்கு ஏற்ப கேள்வி முறை மிக விரிவானதாக இருத்தல் வேண்
டும். அது கிராம மக்களின் வாழ்க்கையின் எல்லாப் பகுதியையும்
சார்ந்ததாக இருத்தல் வேண்டும். அது அவர்களுடைய ஆத்மீக,
சமூக, சரீர, பொருளாதார இன்னும் மனோநிலை இவைகளைத் திட்ட
மாக அறிவதற்கு ஏற்றதாக இருத்தல்வேண்டும். இவ்வாறிருப்பின்
மக்கள் விருப்புடன் ஒத்துழைப்பார்கள். ஆராய்ச்சியின்போது பல
உண்மைகள் விளங்கும்.

(தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி :—

அறிவாலயம்

ஓர் தமிழ் நாடகம்

[தெ. பா. சம்பந்தன்]

நாடக உறுப்பினர்கள்

வேலாயுதம்	—	ஓர் ஏழை
செட்டியார்	—	கடன் கொடுப்பவர்
தனபாலர்	—	ஓர் பணக்காரன்
கணபதி ஐயர்	—	தனபாலர் நண்பன்
இளங்கோ	—	தனபாலர் மகன்
சேரன்	—	வேலாயுதம் மகன்
கனகம்	—	வேலாயுதம் மகள்

காட்சி 7.

(செட்டியார் வருகிறார்.)

வேலாயுதம் :—வாங்க செட்டியாரே வாங்க.

செட்டியார் :—என்ன வேலாயுதம் இனிமேல் ஒரு நிமிஷங்கூட பொறுக்கமாட்டேன். பணத்தைப் பைசல் பண்ணு.

வேலா :—பணம் என்னமோ ரெடியாகத்தான் இருக்கிறது. உங்களைத்தான் காணவில்லை. இருங்கள் இதோ வருகிறேன்.

(வேலாயுதம் உள்ளே போகிறார். செட்டியார் இங்கும் அங்கும் பார்க்கிறார்.)

செட்டி :—(தனக்குள்) இத்தனை நாள் பணம் கேட்டா இன்னுங் கொஞ்சம் பொறுத்துக்கொள் என்பான். இன்றைக்கு என்னடா வென்றால் உங்களைத்தான் காணவில்லை பணமென்னமோ ரெடியாக இருக்கிறதென்கிறானே !

(வேலாயுதம் வருதல்)

செட்டி:—உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துவிட்டேன். என்னை மன்னிக்க வேண்டும். வேண்டுமென்றால் ஒரு வாரம் பொறுத்து...

வேலா :—செட்டியார் அதெல்லாம் வேண்டாம். இன்றைக்கே இதைப் பெற்றுக்கொண்டு போங்கள்.

(செட்டியார் பணப்பையை வாங்கிக்கொள்கிறார் வேண்டா வெறுப்போடு.)

செட்டி :—அப்பொழுது நான் வரட்டுமா?

வேலா :—மகாராஜனு செய்யுங்கள்.

(செட்டியார் திரும்பித் திரும்பிப் பார்த்துப் போகிறார்.)

[திரை.]

காட்சி 8.

இடம் :—ஊர் கோயில்.

[தனபாலர் கனகத்திற்குத் தாலி கட்டுகிறார். இருவரும் வேலாயுதம் காலில் விழுகின்றனர்.]

வேலாயுதம் :—(ஆசீர் வதிக்கிறார்) தீர்க்காயுசானுபவ.

தனபா :—(வேலாயுதத்தைப் பார்த்து) உங்களுக்குக் கார் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதில் ஏறிக்கொண்டு வீட்டிற்குப் போகலாம். எங்களுக்கும் போக அநுமதி தாருங்கள். என்ன கனகம் ஏன் சும்மா நிற்கிறே. அப்பாவிடம் சொல்லிவிட்டு வா போவோம். நேரமாகிறது.

கனகம் :—அப்பா, (அழுகிறாள்.)

வேலா :—(தலையைத் தடவிக் கொடுத்து) அழாதேயம்மா. சந்தோஷமாகப் போய் வா. கல்யாணம் ஆனதும் கணவன் வீடு போக வேண்டியவள் தானே நீ. எத்தனை நாளைக்குப் பெண்ணாய்ப் பிறந்தவள் அப்பாவோடவே இருக்க முடியும்?

கனக :—(கண்ணைத் துடைத்துக்கொண்டு) அப்பா, அடிக்கடி அங்கே வாருங்கள். அடிக்கடி கடிதம் போடுங்கள். அண்ணாவையும் அடிக்கொருதரம் வந்து என்னைப் பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள்.

வேலா:—ஆகட்டும் அம்மா (கண்ணைத் துடைத்துக்கொள்ளுகிறான்)

(தனபாலர், கனகம் போதல்.)

[திரை]

காட்சி 9.

இடம் :—தனபாலர் வீடு, மணவறை.

தனபாலர் :—கனகம், என் கண்ணே, இங்கே வா.

கனக :—ஊ—ஹூம். நான் மாட்டேன்.

தனபா :—நீ வரமாட்டாயா. ஆமாம், உன் இலவம் பஞ்சு போன்ற பாதம் செம்பருத்திப் போலச் சிவந்து விடும். நானே அங்கு வருகிறேன். (அவர் எழுந்து போகிறார். கனகம் வேறு இடத்திற்கு ஓடுகிறாள்.) பாலைவனத்தில் தொலைவில் தண்ணீர் தோன்றுமாம். ஆவலாக அங்கு ஓடிச் சென்று பார்த்தால் தண்ணீர் அங்கே இருக்காதாம். இன்னும் தொலைவில் இருப்பது போலத் தோன்றுமாம். பிரயாணிகளின் தாகம் கானல் நீருக்குத்தான் தெரியாது. ஆனால், என் தாகம் உனக்குத் தெரியாதா ? (மறுபடியும் தாவிப் பிடிக்கிறார்) அகப்பட்டுக் கொண்டாயா ? இனி நீ என்னிடம் தப்ப முடியாது.

கனக :—தாத்தாவிற்குப் பிடிக்கிற ஆட்டம்கூடத் தெரியும்போலிருக்கிறதே. ஐயோ தாத்தா, இதென்ன இப்படி வியர்க்கிறதே (முந்தானையால் அவர் முகத்தைத் துடைக்கிறாள். (கூஜாவில் உள்ள பாலை டம்ளரில் ஊற்றுகிறாள்.) இதைக் கொஞ்சம் குடியுங்களேன் ஆடிய களைப்புத் தீரும்.

தனபா :—(கையில் வாங்கிக்கொண்டு) முதலில் நீ குடி. பிறகுதான் நான் குடிப்பேன். (கனகம் ஒரு வாய் குடிக்கிறாள்) ஆமாம் என்னை இப்படித் தாத்தா தாத்தா என்று பரிகாசம் செய்கிறாயே எனக்கென்ன அப்படி பிரமாதமாக வயசாகிவிட்டது ? இதோ, இனிமேல் என்னை அந்த மாதிரியாக அழைக்கக்கூடாது, தெரிந்ததா ?

கனக :—ஆமாம் தாத்தா......

தனபா :—பார்த்தாயா, மறுபடியும் தாத்தா என்றழைக்கிறாயே.

கனக :—ஓ, மறந்து விட்டேன்... ஆமாம் உங்களுக்குப் பெண், பிள்ளை ஒன்றுமே இல்லையா ?

தனபா :—ஒரு பிள்ளை இருந்தான்...

கனக :—இருந்தானா ? அப்படியானால் இப்போது இல்லையா ?

தனபா :—அவன் எவளோ ஒரு முன்பின் தெரியாத கழுதையைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றான்.

நான் முடியாது என்று சொல்லி வீட்டை விட்டே விரட்டி விட்டேன்.

கனக :—நல்ல வேலை செய்தீர்கள். அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார் என்று ஏதாவது தெரிந்ததா ?

தனபா :—அந்தக் கழுதை எக்கேடு கெட்டால் எனக்கென்ன. தொலைந்தது சனியன் அவ்வளவுதான்.

(கதவு படீரென்று திறந்து கொள்கிறது. இளங்கோவும், கனகமும் உள்ளே நுழைகின்றனர்.)

இளங்கோ :—அப்பா, தொலைந்தது சனியன் என்றீரே தொலைய வில்லை. இதோ உங்கள் முன் நிற்கிறேன். அந்தக் கழுதை எக்கேடு கெட்டால் எனக்கென்ன ? என்றீரே, நான் ஒன்றும் கெட்டுவிடவில்லை. காதலித்த கனகத்தைக் கலியாணம் செய்து கொண்டு உங்கள் முன் நிற்கிறேன்.

தனபா :—(தன் பக்கத்தில் இருப்பவளையும் இளங்கோ பக்கத்தில் இருப்பவளையும் மாறிமாறிப் பார்க்கிறார், திகைக்கிறார்) இதென்ன இருவரும் ஒரே மாதிரியாக இருக்கின்றீர்களே !

(தனபாலர் பக்கத்தில் உள்ள கனகம் தன் வேடத்தைக் கலைக் கிறாள். அங்கே கனகத்தின் அண்ணன் சேரன் காட்சி அளிக்கிறான். சேரன், இளங்கோ, கனகம் மூவரும் சிரிக்கிறார்கள். தனபாலர் விழிக்கிறார்.)

சேரன் :—இளங்கோ, அப்பாவுக்கு வரச்சொல்லி தந்தி அடித்துவிட் டாயா ?

இளங் :—ஓ, முன்னேயே அடித்துவிட்டேன். அவர்கூட அதோ வருகிறாரே.

(வேலாயுதம் வருகிறார்.)

தனபா :—வேலாயுதம் நீ கூட இவர்களுக்கு ஒளவா ? எல்லோரு மாகச் சேர்ந்து என்னை அவமானப் படுத்திவிட்டீர்கள். நான் உங்களைச் சும்மாவிடப் போவதில்லை. தாவாபோடாமற் போனால் என் பேர் தனபால முதலியார் இல்லை.

சேரன் :—முதலியார் வாள், அவசரப்படாதீர்கள். உங்களால் எங் கள் மீது வழக்குத் தொடுக்கவே முடியாது. நீங்கள் யார் ? நீங்கள் எப்படிப் பணக்காரனானீர்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்து கள்ள மார்க்கெட்டில் விற்றுக் கொள்ளை லாபமடித்தீர்கள். அது

மட்டுமல்ல, வருமான வரியைச் சரியாக அரசாங்கத்திற்களிக்க விரும்பாமல் இரண்டு கணக்குப் புத்தகங்களைத் தயாரித்தீர்கள். அவற்றுள் உண்மையான கணக்கேடு என்னிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை நான் வெளியிட்டால் நீர்தான் அரசாங்கத்திற்கு விருந்தாளியாக நேரிடும். புத்தியோடு பிழையுங்கள்!

வேலா :—என்னடா மாப்பிள்ளையைப் பார்த்துத் தந்துபித்து என்று உளறுகிறாய்.

சேரன்:—அப்பா, உனக்கு மாப்பிள்ளை யார் என்றே தெரியவில்லையே! யார் மாப்பிள்ளை? இவரா? இல்லை. இதோ இளங்கோ இருக்கிறான். அவன் தான் உங்களுக்கு மாப்பிள்ளை.

வேலா :—என்னடா பிதற்றுகின்றாய்.

சேரன் :—இல்லையப்பா நான் பிதற்றவில்லை; கூறுகிறேன் கேளுங்கள். கனகமும், நானும் எங்கம்மாவிற்கு இரட்டைக் குழந்தைகள். பார்ப்பதற்கு நாங்கள் இருவரும் ஒரே மாதிரியாகத் தான் தோற்றுவோம். நாங்கள் குழந்தையாக இருக்கும்போது எங்கள் தாயார் இறந்து போனார். எங்களை நீங்கள் வளர்த்தீர்கள். நாங்கள் வளர்ந்தோம். நானும் கனகமும் ஒன்றாகச் சாப்பிடுவோம், ஒன்றாக விளையாடுவோம், ஒன்றாகப் படிப்போம். நான் கனகத்தின் மீது என் உயிரையே வைத்திருந்தேன். அவள் காலில் முள் தைத்தால், அது என் காலில் தைப்பது போலிருக்கும். நான் வேதனைப் படுவேன், விசாரப் படுவேன். ஒரு முறை ஆசிரியர் கனகத்தை ஓர் கேள்வி கேட்டார். அவள் பதில் கூறவில்லை. ஆசிரியர் பிரம்பு அவள் ரோஜாநிறக் கைகளைச் சுவைத்துக் கொவ்வைப் பழம் போலாக்கி விட்டது. அவள் விக்கி விக்கி அழுதாள். என்னால் வேதனை பொறுக்க முடியவில்லை வீறிட்டழுதேன். அவ்வளவு அன்பை நான் அவள் மேல் வைத்திருந்தேன்!

கனகத்திற்குக் கல்யாணம் என்ற பேச்சு என் காதில் விழுந்தது. முதலில் நான் மகிழ்ந்தே போனேன். ஆனால் பின்பு தான் நீங்கள் பணப்பிரேமை காரணமாகக் கிழவனுக்கு நிச்சயித்தது தெரிய வந்தது. அதே நேரத்தில் இளங்கோவைக் கனகம் காதலிப்பதும் தெரிய வந்தது. கந்தகக் குழம்பிலே தடுக்கி விழுந்தவன் போலானேன். உங்கள் மீது எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மதியை மேகம் மறைத்தால் உலகமே இருண்டு விடுகிறது. விவேகத்தை வெறி மறைத்தால்

என்னாகும்? என்று சிந்தித்தேன். என் ஆத்திரம் அடங்கிற்று. ஆனால் அணையவில்லை.

ஒரு திட்டம் வகுத்தேன். அதன்படி கனகத்தின் கல்யாணத்தைக் கோவிலில் நடத்த ஏற்பாடு செய்தேன். கனகத்தைத் தப்பி ஓடச் செய்து இளங்கோவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் செய்தேன். அதே நேரத்தில் நானே கனகத்தின் வேடம் பூண்டேன். நன்கு நடித்தேன். அப்பா, நீங்களே கூட ஏமாறும் அளவிற்கு என் வேடமும் நடிப்பும் அவ்வளவு தத்ரூபமாக அமைந்து விட்டன. உலகத்தில் எல்லோரும் பெண்களுக்குத் தாலி கட்டுவார்கள். ஆனால் இதோ இந்தப் பிரகஸ்பதி ஆணுக்குத் தாலி கட்டினார்! தாலி கட்டியது மட்டுமல்ல கண்ணே மணியே என்று காதல் சுலோகங்களை ஒப்புவித்தார். என்னைப் பிடிக்க வந்தார். நான் ஓடினேன். ஆனால் விடவில்லையவர். தாவித் தாவிப் பிடித்தார் பாலைப் பருகுங்கள் என்றேன். முடியாது என்றார். ஏன் என்று கேட்டேன். நான் எச்சில் பண்ணிய பின்பு தான் அவர் அதைப் பருகுவாராம்!

முதலியாரே, ஏன் தலை குனிந்து நிற்கின்றீர்கள். உங்கள் வண்டவாளம் எல்லாம் வெளிப்படுகின்றதே என்றா? உங்களுக்கு என் மீது கோபம் வரும். அது இயற்கை. ஆனால் உண்மையில் நீங்கள் பகுத்தறிவுடையவராக இருந்தால் நன்றி செலுத்தியிருப்பீர்கள். நீர் இறந்தால் ஒரு இளம் பெண் வாழ்க்கையே சீர் கெட்டிருக்கும். அதை நீர் சிந்திக்கவில்லை. அப்பாவும் அதனை மறந்தார்! ஆனால் நான் தான் உங்களை மீட்டவன்: நீர் ஒரு கிழவியை மணந்திருக்கலாம். ஆனால் அதைச் செய்யவில்லை. ஒரு குமரியை மணம் செய்யத் துணிந்தீர். குமரியை மணக்கப் போய் ஓர் குமரனுக்கு மாலையிட்டீர்! நீர் செய்த தவறுகளை மறந்து விடுகிறோம். உம்மையும் மன்னித்து விடுகிறோம். உம்முடைய மகனையும், மருமகளையும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

(இளங்கோவும் கனகமும் காலில் விழுகிறார்கள். தனபாலர் ஆசிர்வதிக்கிறார்.)

[திரை]

(தொடரும்)

ஐம்புலப் பயிற்சி

(A. P. குமார். ஆசிரியர், போர்டு பாடசாலை, பெரியசாமிபுரம்)

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் மூலமாய் அறிவை விருத்தி செய்தலே ஐம்புலப் பயிற்சியாகும். ஸப்த, ஸ்பரிஸ, ரஸ, ரூப, கந்தம் அல்லது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐவகை உணர்வுப் பயிற்சியை ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு அளிக்கும் விஷயமாக ஆசிரியர்கள் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். பாடசாலையில் போதிக்கப்படும் பல பாடங்களில் இயற்கைப் பாடம் ஐம்புலப் பயிற்சிக்கு மிகவும் சாதகமாக இருக்கிறது.

முடிவு காணு நீல நிற வானத்தின் பரப்பு! ஆழ்கடல் வானின் இயற்கை வழி செல்லும் மதி! கதிரவன் மறைவதும் உதிப்பதும்! புவி சுழன்று கதிக்கும் விந்தை! பற்பல விதமான தாவரவர்க்கங்கள் வளர்கின்ற விநோதம்! எறும்பு முதல் எண்ணாயிரங்கோடி ஜீவராசிகள் வாழ்கின்ற விதம்! இவைகளெல்லாம் ஆண்டவன் படைப்பின் அற்புதங்கள். இவ்வித இயற்கைக் காட்சிகளை நேரில் கண்டு உற்று நோக்கி ஆராய்ந்து அறிதலே இயற்கைப் படிப்பாகும். இவ்வாறு இயற்கைப் பொருட்களின் மூலமாகவே ஐம்புலப் பயிற்சி அளிக்க முடியும்.

ஆரம்ப வகுப்புகளில் இளம் மாணவர்களாக இருப்பதால் இவ்விதப் பயிற்சி அளிக்க வெளியே வெகு தூரத்தில் அழைத்துச் செல்ல இயலாது. அவர்களுக்கு அதிகமாக வகுப்பறைப் பயிற்சியும் கூடாது. பாடசாலையின் அண்மையிலாவது அல்லது சிறிது தூரமாக உள்ள பாடசாலைத் தோட்டத்திற்குச் சென்று இயற்கைப் பாடத்தைப் போதித்து ஐம்புலப் பயிற்சி அளிக்கலாம். இளம் மாணவர்கள் கடினமான வேலை செய்ய முடியாது. சிந்திக்கும் திறமையும் குறைவு. சிக்கலான விஷயங்களை எளிதில் தெரிந்து கொள்ள முடியாது. இவர்கள் ஐம்புலன்கள் மூலமாகவே இயற்கைப் பொருட்களையும், அவைகளின் தன்மைகளையும் அறிந்து கொள்ள முடியும். பாடசாலைத் தோட்டத்தில் பலவிதமான மரம், செடி, கொடிகள் வளர்ந்திருக்கும். புஷ்பங்கள், இலைகள், காய்கள், பழங்கள் முதலானவைகளைத் தொட்டுப் பார்க்கச் செய்ய வேண்டும் மாணவர்களை. காய்களில் சில வழுவழுப்பாகவும், சில சொர சொரப்பாவும், முட்கள் போன்றவைகளாகவும் இருக்கும். உதாரணமாக கத்தரிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், பலாக்காய் இவை

களைத் தொட்டுப் பார்ப்பதால் உடம்பில் ஓர்வித உணர்ச்சி ஏற்படுகிறது. செந்தட்டி என்னும் ஓர் வகைச் செடியின் இலைகள் உடம்பில் பட்டால் உடனே அரிப்பு அல்லது நமச்சல் உண்டாகும். இந்த விதமான தாவரங்களை நேரில் பார்த்தாலும், நுகர்ந்தாலும் அதன் இயற்கைத் தன்மையை மெய்யுணர்வு மூலமாகத் தெரிந்துகொள்ள முடியுமே தவிர வெளிப்படையாகத் தெரிந்து கொள்ள முடியாது.

தவழும் பருவமுள்ள குழந்தைகள் தன் பக்கத்தில் கிடக்கும் எந்தப் பொருளையும் எடுத்து வாயில் வைத்துச் சுவைத்துப் பார்ப்பது போல, இளம் பள்ளி மாணவர்கள் பலவிதமான காய்களையும், பழங்களையும் கண்டவுடன் ஆவலுடன் பறித்து, கடித்துச் சுவைத்து ருசிகாண இயற்கை தூண்டும். அதன் பின்னர் அவர்கள் இஃது இத்தன்மையுடையது என்பதை அறிகிறார்கள். மாணவர்கள் ஒரே பொருளின் மீது கவனம் செலுத்துவதில்லை. தோட்டத்தில் காணப்படும் பல பொருள்களின் மீதும் அவர்கள் கண்கள் சுற்றும், அவைகளைப் பறிப்பார்கள். சுவை பார்ப்பார்கள். பழங்களில் சில இனிப்பாகவும், சில புளிப்பாகவும் 'சப்'பென்றுமிருக்கும். உதாரணம்மாம்பழம், அன்னுசிப்பழம், தக்காளிப்பழம். காய்களில் சில இனிப்பாகவும், சிலபுளிப்பாகவும், துவர்ப்பாகவும், கசப்பாகவும் இருக்கும். உதாரணமாக மாங்காய், வாழைக்காய், பாகற்காய் ; காய்களும், பழங்களுமாத்திரமல்ல, இலைகளில் சில ஓர் வித சுவைஉடையவையாகஇருக்கிறது என்பதை ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

துளசி, ஏலக்காய் இலை, கற்பூர இலைகள் போன்றவைகள் ஓர் வித வாசனை யுடையவைகள் இவைகளைப் பற்களால் மென்று ருசிபார்க்கலாம். நாரத்தை, எலுமிச்சை, ஏலக்காய் இவைகளின் இலைகளை நுகர்ந்து, வாசனையைத் தெரிந்து கொள்வதைக் காட்டிலும், லேசாகப் பற்களால் மென்று ருசியையும் வாசனையையும் அறியலாம். சாதாரணமாக இலைகளின் வடிவங்கள் வெவ்வேருக இருந்தாலும் ஒரே தன்மையுள்ளவாசனை, ருசி உள்ளனவாகக் கருதுகிறோம். ஆனால் அவைகளைச் சுவைத்தும், நுகர்ந்தும் பார்க்கும்போதுதான் தாவர இலைகளில் மறைந்துள்ள வேற்றுமைத் தன்மை புலனாகிறது. இவைகளின் அற்புத சிருஷ்டிகளின்மூலமாகக்கடவுள் பக்தியும் ஏற்படுகிறது. இப்பேர்ப்பட்ட இலைகளை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் காட்ட வேண்டும்.

காய்களின் வடிவங்களும், புஷ்பங்களின் பலவகை நிறங்களும், விதவிதமான தாவரவகைகளும் மனிதர்கள் கண்களுக்கு இனமை விருந்தளிக்கின்றன. மெய்யுணர்வாலும், சுவையுணர்ச்சியாலும் இயற்கைப் பொருட்களின் தன்மைகளை அறிவதாலும் தாவரங்கள் பூத்துக், காய்த்துப், பழுத்

றுப் பலன் உண்டாக பட்சி ஜாலங்களின் உதவியும் அவசிய மாகஇருக்கின்றன.இப்புள்ளினங் களை அழைப்பதற்குத் தாவரங் கள்பலவிதவாசனையுடையனவாக வும், வர்ணங்கள் உடையனவாக வும்இருக்கின்றன. காதலனுக்காக காதலி வாசனை பூசி, தன்னை அலங்கரித்துக்கொள்வதைப் போல: ஆனால் இஃது செயற்கை. அஃது இயற்கை,இயற்கை எழிலை வெல்ல முடியாது செயற்கை அலங்காரத்தால்.

மாணவர்கள் தோட்டத்தின் பல பகுதிகளுக்கும் சென்று ஆங் காங்கு பலவித நறுமணங்களை நுகர ஏற்படுகிறது. தாழம்பூ, மனோரஞ்சிதம் போன்ற புஷ்பங் களை நேரில் காண்பதற்கு முன் அவைகள் தாங்கள் இருக்கு மிடத்தை தன் மணத்தை அள்ளி வீசித்தெரிவிக்கின்றன.பெண்டிர் கள் பூசிக்கொள்ளும் முகப் பவு டர்களை நுகர்ந்தால் ஒவ்வொரு (Trade Mark) உள்ள பவுடர் களும் வெவ்வேறு விதமான வாசனைகளைத் தருவது போல இயற்கைப் பொருட்கள் தரும் வாசனையால் இவைகள் இன் னின்ன பொருள்கள் என்பதைப் பார்க்காமலே சொல்லிவிடக் கூடிய பழக்கத்தை மாணவர் களுக்கு உண்டு பண்ண வேண் டும்.

தாவரங்கள் நிறைந்த தோட் டத்திற்குப் பலவிதமானபட்சிகள் ஆகாரத்திற்காகவும், கூடு கட்டி வாழவும், மரப்பொந்துகளில் வசிக்கவும் வருகின்றன: இப்பட் சிகள் இனம் இனமாக, கூட்டம் கூட்டமாக, ஒற்றுமையாக, சந் தோஷமாக, தன் தன் இயற்கைக் குரல்களை எழுப்பிக் கொண்டு மரத்துக்கு மரம், கிளைக்குக் கிளை பறந்து செல்லும் வேடிக்கைகளை நாம் காண்கிறோம். அவைகளின் பலவித குரல்களைக் கேட்கிறோம்: பட்சிகளில் சிலவற்றைப் பார்த்தி ராதவர்கள், அவைகளின் வெவ் வேறு விதமான குரல்களை அடிக் கடி கேட்டு, இவைகள் இன் னின்ன பட்சிகள் என்று சொல்லி விடுகிறார்கள் பழக்கத்தால். குருவி, கிளி, மைனா, கூகை, புறா, காகம், மரங்கொத்தி போன்ற எத்தனையோ விதமான பட்சி ஜாலங்களின் இனிய குரல்களை மாணவர்கள் தம் செவியுணர் வால் அறிய வேண்டும்: அப்பட்சி களை நேரில் பார்க்கச் செய்ய வேண்டும்.

சில இலைகள், புஷ்பங்கள், பாகற்காய் போன்றவை முதலிய வைகளைத் தொட்டுப் பார்த்து அதன் தன்மைகளை அறியலாம். சிலவற்றை ருசி பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். புஷ்பங்களின் பல்வேறு நிறங் களையும் ஒரே புஷ்பத்திலுள்ள பல நிறங்களையும் நேரில் கண்டு தெரியவேண்டும், இலைகள், பழங் கள், புஷ்பங்கள் முதலானவற்றில் சிலவற்றை நுகர்ந்து பார்த்தே அறிய வேண்டும்: வண்டினங்கள், பட்சிகள், மிருகங்கள் முதலி யவைகளை, அவைகள் கொடுக் கின்ற குரல்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்: இவ்

விதம் இயற்கைப் பொருள்களில் காணும் ஒழுங்கும் அழகும் கண்களுக்கு ஒரு நல்ல விருந்து.

புஷ்பங்களைத் தொட்டுப் பார்க்கும்போது அவைகள் மெதுவாக இருக்கின்றதன்மையால் அப்புஷ்பங்களின் மீது ஆசையும், இரக்கமும் ஏற்படுவதால் அவற்றைக் கசக்க மனம் உண்டாவதில்லை. இதனால் முரட்டுக் குணமுடைய பிள்ளைகளும் திருந்திவிடுவார்கள். இயற்கைப் பொருள்களை உற்று நோக்குவதால் ஆராயும் சக்தி ஏற்படுகிறது: கண்ணால் கண்டவைகளையும் செவியால் கேட்டவைகளையும், கையால் தொட்டுப் பார்த்தவைகளையும், மூக்கால் நுகர்ந்தவைகளையும் பற்றி மாணவர்களும் ஆசிரியர்களும் சம்பாஷித்துத்தெளிவுபடுத்திக் கொள்ளும் போது மொழிப் பயிற்சி உண்டாகிறது: ஆசிரியர்கள் மாணவர்களுடன் சகஜமாகப் பழகி, வேடிக்கையாக ஐம்புலப் பயிற்சிக்கு அநுசரணையாக இருக்க வேண்டும்: நகரங்களில் ஆசிரியர்கள் மாணவர்களை (Park) என்று சொல்லக்கூடிய இடத்திற்கு அழைத்துச் சென்று ஐம்புலப் பயிற்சி அளிக்கலாம்: கிராமமாக இருந்தால் பாடசாலையின் சுற்றுப்புறத் தோட்டங்கள், வயல்கள், தோப்புகள் இருக்கும்: அங்கே அழைத்துச் செல்லலாம். ஐம்புலப் பயிற்சிக்கு எதைப் போதித்த போதிலும் பொருள்களை நேரில் காட்டி, உற்சாகத்தையும், ஆவலையும் பெருகச் செய்ய வேண்டும். அநுபவத்தின் மூலமாகவே பிள்ளைகளைப் பயிற்சிக்க வேண்டும்: பாடசாலையில் இருந்து கொண்டு இயற்கைப் பாடத்தைச் சாதகமாக வைத்துப் பயிற்சி கொடுப்பது விரும்பத் தக்கது அல்ல.

ஆகையால் உற்சாகமும், ஊக்கமும், ஆவலுமுள்ள ஆசிரியர்கள், சின்னஞ்சிறு பள்ளி மாணவர்களுக்கு ஐம்புலப் பயிற்சியை அளித்து அவர்களுக்கு உற்சாகத்தை அதிகப் படுத்தி ஐம்புலன்களின் மூலமாகப் பெற்ற அறிவால் தன்னம்பிக்கை, நல்ல குணம், நற்செய்கை, இயற்கையில் பற்று, கடவுள் பக்தி, வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ளுவதற்கான அஸ்திவாரம், பிறரிடம் அன்பு, இரக்கம், பணிவு முதலியவற்றில் மேன்மையடையச் செய்வது சிறந்ததாகும்: இவ்வைம்புலப் பயிற்சியின் கூறுபாட்டையும் ஆராய்ந்து அறிதல் வேண்டும்: இவ்வாறு ஐம்புலப் பயிற்சி பெறுபவன் உலகத்தை அறிந்து பயன்பெற வல்லவனாவான். தெய்வப் புலமைத் திருவள்ளுவப் பெருந்தகையாரின் பொன் மொழி ஒன்று கூறுகிறது :—

"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு."

கோள் சொல்லல்

(தென்னாப்பிரிக்கா—டர்பன்—திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

உலகவின்பத்தைக் கெடுப்பவைகளுள் கோட் சொல்லல் ஒன்று. இக்குணம் எவ்விடத்தும் காணப்படுகிறது. கல்வியறிவிற்கும் இதற்கும் பொருத்தமில்லை. இது பழக்கத்தாலும், மனப்போக்காலும் ஏற்படுகின்ற துர்க்குணங்களில் மிக இழிவுடையது. இதற்கு யாரும் நிகரில்லை. சக்கரவர்த்தியோ, ஏழையோ, அல்லது மகா ஞானியோ, எவரும் இதிலிருந்து தப்புகிறதில்லை. மானத்தையும் பெருமையையும் விலக்கி எவ்விடமும் சென்று பெருச்சாளியைப் போல், இரவுகளில் மண்ணைத் தோண்டி புழுக்களைத் தின்று திருப்தியடைந்து வெளிச்சத்தில் மறையும் சுபாவமுடையது. உடன் அடைக்கப்படாவிடில் இப்பொந்தில் பாம்பினங்கள் நுழைந்து வசிக்கும்.

இதனால் வரும் தீமைகள் பலவுள. அத்தீமைகள் சொல்வோரையும் சொல்லப்படுவோரையும், துன்பத்திற்குள்ளாக்குகின்றன. ஷேக்ஸ்பியர் நாடகங்களிலொன்றில் "அயாகோ" என்ற கோட் சொல்லி "ஓதல்லோ" "டெஸ்டிமோனா" என்றவர்களின் மரணத்திற்குக் காரணபூதனாயினும் தானொரு பயனையும் அடையவில்லை. கோளைச் சொல்லி தக்க பதவியை யடைந்தவர் ஒருவருமில்லை. அவரின் கெட்ட குணம் வெளி வராதவரை, அவர் சில பயனை யடையினும், ஒரு சமயம் வெளிப்பட் (மறைக்கப்படுந்தன்மையல்ல) அவருக்குக் கெட்ட பெயரும், துன்பமும் கொடுமையாய்க் கிடைக்கின்றன. அப்போது பிடிபட்ட பெருச்சாளி கொல்லப்படுவது போலின்றி, ஒவ்வொரு நிமிஷமும் கொலை பண்ணப் படுகிறவன் போல் துயர் அடைகின்றான். எவரைப் பற்றிச் சொல்லப்படுகின்றதோ அவர் படுந்துயரம் குறைவன்று. பெயர் மங்குகின்றது; வலி குறைகிறது; மனப்பீடை இன்பத்தைத் தடுக்கின்றது. இவர் இளைத்தவராயின் அளவில்லாத நஷ்டமடைகின்றனர். பலமுடையராயின், அவ்விழுக்குத் தன்மை தாக்கா வண்ணம் காப்பாற்றி சொல்பவரைத் தக்க சமயத்தில் இழுத்துப் பகிரங்கமாய் அவமதிப்படையுமாறு செய்வர்.

கோள் சொல்வதெதனாலெனை விசாரிப்பது தகுதி. தந்நலமே இதற்கு முக்கிய காரணமெனினும், சிலவிடத்துப் பிறர் துன்பத்தைப் பார்த்துக் களிக்குமியல்பு காரணமெனலாம். கோள் சொல்பவர் பொதுவாய்த் தம்மில் உயர்ந்தவரையும், பலமுள்ளவரையும் பற்றி நிற்பதால், இதை நாமறிகிறோம். கோள் சொல்லும் இயல்பினன் பொது

வாய் எக் கொடுமைக்கும் அஞ்சாமல் சமயந்தோறும் வெவ்வேறு மனிதனாகத் தோன்றுகின்றான். இவனை நன்கு ஆராயின், பொறாமை, துராசை, திருப்தியின்மை, பிறர் துன்பத்தில் சந்தோஷிக்குங் குணம் முதலிய அற்பத்தன்மைகள் பல அவனிடம் தோன்றும்.

இக் கொடுமையிலிருந்து தப்பும் வழி ஒன்றே. அதாவது குற்றமென்று தெரிந்ததன் செய்கையைக் குற்றமென்றே ஒருவன் பகிரங்கமாய் ஒப்புக்கொள்ள வேண்டும். அவர் தம் குற்றத்தை நன்றாய் உணர்ந்து அவ்விதக் குற்றம் வாராதபடி நடப்பாராயின் அவருக்குச் சத்துருவில்லை. அப்போது அவரைக் கொண்டு எந்த கோட் சொல்லியும், ஒன்றும் சொல்லப்புகான். ஒருக்கால் அப்புல்லியன் இவரைக் கொண்டாடவும் கூடும்.

இவ்விழிவுக் குணம் வெகு நாளாய் நிலைத்திருக்கிறது. சிரஞ்சீவிப் பட்டம் பெற்றிருந்தாலும் இதன் வலி குறைய வழியுண்டு. இது மனித பேதத்தாலுண்டாகியது. பொதுவாய் கோள் கேட்பவர், சொல்பவரினும், சொல்லப்படுவரினும் கௌரவம் வாய்ந்தவர். ஆதலின் அவர் தம்மிடம் வரும் விஷயங்களை, அதிலும் பிறரைப் பற்றிய குற்றங்களை மன்னிக்கும் பெருந்தன்மையையும், அவைகளின் உண்மையை யறியும் திறமையையும் வகிக்க வேண்டும். இவ்விரண்டும் அவசியமானவை. இல்லாவிடில், கேட்பவரே துயரமடைவர், இகழப்படுவர். இவர் புல்லரினும் புல்லராவர்.

உலகீர்! இக் கெட்ட விஷயத்தில் மனஞ் சென்றதைப் பற்றி மன்னிக்க!

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94–95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை, 1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–8
ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0
பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–0
வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–0

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

தர்மபுரி தாலுக்கா போர்டு & பஞ்சாயத்து ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

(ஸ்தாபிதம்—1939)

21—12—52-ல் நடந்தேறிய ஆசிரியர்கள் மகாநாட்டில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பதைப்போல எல்லா ஸ்தல ஸ்தாபனங்களில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கவேண்டுமாய் சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொள்ளலாமாகத் தீர்மானிக்கிறது.

2. சென்னை அசெம்பிளிக்கு ஆசிரியர் ஸ்தானத்திற்கு ஓட்டுக் கொடுக்கும் உரிமையை எல்லா கிரேடு ஆசிரியர்களுக்கும் வழங்குமாறு அகில இந்திய சர்க்காரைக் கோருகிறது.

3. ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 3-ஆம் படிவத்திற்கு மேல் ½ சம்பளம்என்பதைமாற்றி கல்லூரிப்படிப்புவரையில் சம்பளமின்றிப் படிக்க அனுமதி அளிக்குமாறு சென்னை சர்க்காரைக் கோருகிறது.

4. கிராமத் தபாலாபீஸுகளில் போஸ்ட்மாஸ்டராக வேலை செய்யவிரும்பும் அவ்வூர் ஆசிரியர்களையே அந்த வேலைக்கு முதல் சிபார்சு செய்து உதவுமாறு கனம் டைரெக்டர் அவர்களையும், வேலூர் போஸ்டல் ஸூபரின்டெண்டென்ட் அவர்களையும் கேட்டுக்கொள்கிறது.

5. போதனு உபகரணங்களை ஏழை ஆசிரியர்கள் தயாரிப்பார்கள் என எதிர்பார்ப்பதை விட, மானேஜ்மெண்டாரே கொடுத்து உதவுமாறு உத்திரவிட சர்க்காரைக் கோருகிறது.

6. பஞ்சமும், கஷ்டமும் நிறைந்த இக்காலத்தில் கொடுத்து வரும் பஞ்சப்படியை மத்திய அரசாங்கத்தார் வழங்கும் விகிதத்திற்கு உயர்த்தி ஏழை ஆசிரியர்களைக் காப்பாற்றக் கோருகிறது.

7. எல்லா ஆரம்ப, நடுத்தரப் பள்ளிகளில் வேலை செய்யும் ஒரு கிரேடில் உள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் யாதொரு பாகுபாடுமின்றி ஒரே விதமான சம்பளம், விடுமுறை, மற்ற வசதிகளையும் அளிக்குமாறு நமது சர்க்காரைக் கோருகிறது.

8. ஆரம்பப் பள்ளிகளுக்குப் பாட புத்தகம் தேர்ந்தெடுக்கும்போது, டெக்ஸ்ட் புக் கமிட்டியில் ஆரம்பாசிரியர்கள் பிரதிநிதிகள் இருவரை நியமிக்குமாறு ஜில்லா போர்டு பிரசிடெண்டைக் கோருகிறது.

9. ஆசிரியர்களின் P. F. போனஸை ரூபாய்க்கு ஒரு அணாவாக இருப்பதை இரண்டணாவாக உயர்த்துமாறு சர்க்காரையும் ஜில்லா போர்டையும் கோருகிறது.

10. கைத்தொழில் ஆசிரியர்களுக்குக் காலா காலத்தில் அவர்களுக்கு வேண்டிய சாமான்களை சப்ளை செய்யுமாறு ஜில்லா போர்டு தலைவரைக் கோருகிறது.

11. பஞ்சாயத்து பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு பிரதி மாதமும் சம்பளம் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கோயம்புத்தூர் லோகல் போர்டு இன்ஸ்பெக்டர் அவர்களைக்கேட்டுக் கொள்ளுகிறது.

12. ஆசிரியர்களை மாற்றும்போது அவர்களுக்குப் பிரயாணச் செலவு கொடுக்கும்படி ஜில்லா போர்டு பிரசிடெண்டைக் கேட்டுக் கொள்ளுகிறது.

13. சர்க்கார்சிப்பந்திகளுக்குக் கொடுப்பதுபோலவே ஆசிரியர்களுக்கும் P. F. போனசோடு, பென்ஷனும், ஆயுள் நிதியும் கொடுத்து உதவுமாறு சர்க்காரைக் கோருகிறது.

14. T. S. L. C. பரீக்ஷைகளில் தவறின ஆசிரியர்களுக்கு நீண்ட நாட்கள் வரை தவறின பாடங்களை அறிய முடிவதில்லை. அதனால் அவர்கள் மேற்கொண்டு புதுப் பரீக்ஷைக்கு ஆயத்தம் செய்துகொள்ளவும் முடிவதில்லை. ஆகலால் அம்மாதிரி தவறின ஆசிரியர்களுக்கு ஒரிஜனல் சர்டிபிகேட்டுகளை அனுப்பும்போது அத்துடன் தவறின பாடங்களின் லிஸ்டும் கூடுமானவரையில் துரிதமாக அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோருகிறது.

15. பிரசவ லீவ் எடுக்கும்போது குறிப்பாக சர்க்கார் டாக்டர்களிடம் மெடிகல் சர்டிபிகேட் பெறவேண்டும் என்பதை மாற்றி, மற்ற லோகல் டாக்டர்கள் M. B. B. S., L.M. P. ஹோமியோபதி முதலிய யோக்யதாம்சம் உள்ள ஏதாவது ஒரு டாக்டரிடம் Medical Certificate பெற்றால் போதுமென உத்திரவாக வேண்டுகிறது.

16. லீவு கொடுக்கும் விஷயங்களில் 1933-க்கு முற்பட்டவர் என்றும் 1933-க்கு பிற்பட்டவர்கள் என்றும் பாகுபாடு காட்டி,

M.C. காலத்திலும் அரைச் சம்பளம் கொடுப்பதைத் தவிர்த்து முழுச் சம்பளம் வழங்குமாறு கனம் ஜில்லா போர்டைக் கோருகிறது.

17. பாடசாலைகளில் அதிகப்படியாக இருக்கும் ஆசிரியர்களை மாற்றும்போது இடைக்காலத்தில் மாற்றாமல் வருஷ ஆரம்பத்தி லேயே மாற்றுமாறு கோருகிறது.

18. வேறு ஜில்லாவாசிகள் தங்கள் சௌகரியக் குறைவினால் தங்கள் ஜில்லாக்களுக்கு மாறுதல் கோரும்போது அவர்கள் நலனை யும் உத்தேசித்து சர்வீசுடன் மாறுதல் கொடுக்க அந்த ஜில்லா கல்வி அதிகாரியையும் ஜில்லா போர்டையும் கலந்து கூடுமானவரை யில் உதவி செய்யுமாறு கனம் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் அவர் களைக் கோருகிறது.

19. ஜில்லா போர்டு பாடசாலைகளில் 55—வயது முடிவு பெற்று ரிடையராகும் ஆசிரியர்களை மீண்டும் 60—வயது வரையில் டாக்டர் சர்டிபிகேட் இன்றியும் கோடை விடுமுறைகால சம்பளத் துடனும் ஆரம்ப சம்பள விகிதப்படி நியமிக்கக் கோருகிறது.

20. ஜில்லா போர்டு ஹைஸ்கூலில் வேலை செய்யும் கைத் தொழில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதமே, எலிமெண்டரி பாடசாலைகளில் வேலை செய்யும் கைத் தொழில் பயின்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்குமாறு ஜில்லா போர்டைக் கோருகிறது.

21. எலிமெண்டரி கிரேட் ஆசிரியர்கள் பிரைவேட்டாக S.S.L.C. பரிக்ஷைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது மார்ச் 1953 பரிக்ஷையுடன் முடிவடைவதால், பல ஆசிரியர்கள் மேலும் படித்து முன்னுக்குவர முடியாமல் போவதால் மீண்டும் சில வருஷங்களுக்கு இச்சலுகை நீடித்து நடத்த உத்திரவாக வேண்டுமாய் கல்வி இலாகா அதிகாரிகளை கோருகிறது.

22. அரசியலார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் வாசிக்கும் ஜில்லா போர்டு ஆசிரியர்களின் குழந்தைகளைக் கீழ்க்கண்ட காரணத் திற்காக ஜில்லா போர்டு ஹைஸ்கூலில் சேர்த்துக்கொள்ள அனுமதி அளிக்குமாறு கல்வி இலாகா அதிகாரிகளையும் ஜில்லா போர்டு பிரசி டெண்ட் அவர்களையும் கோருகிறது.

காரணம் :—பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் ஏற்படும் செல வினங்களைத் தாங்க ஆரம்ப ஆசிரியர்கள் சக்தியற்றிருப்பது.

23. உதவி ஆசிரியர்கள் Incharge தலைமை ஆசிரியர்களாக வேலை பார்த்தால் அவர்கள் வேலைபார்த்த காலத்திற்கு Duty Allowance கொடுக்குமாறு ஜில்லா போர்டைக் கோருகிறது.

24. பயிற்சி பெற்ற ஆசிரியர்களைத் தற்காலிகமாக என்று உத்திரவு பிறப்பிக்காமல் அவர்கள் தொடர்ந்து வேலை செய்யவும் விடுமுறைகால சம்பளம் பெறும் வகையிலும் நியமிக்குமாறு ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களைக் கோருகிறது.

25. சில ஆண்டுகளுக்கு முன் எலிமெண்டரி கிரேட் ஆசிரியர்கள் S. S. L. C. பாஸ் செய்தால் அவர்களை செகண்டரி கிரேடாக மாற்றப்பட்டு வந்தது. தொடர்ந்து இனியும் அம்மாதிரி மாற்ற உத்திரவு பிறப்பிக்குமாறு கல்வி இலாகா அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறது.

26. ஆரம்ப ஆசிரியர்களின் ஆரம்ப சம்பளம் 50 ரூபாயாக நியமிக்குமாறு சர்க்காரைக் கோருகிறது.

27. பயிற்சி பெறாத ஆசிரியருக்கும் பயிற்சியில் தவறிய ஆசிரியருக்கும் சம்பள விகிதம் வித்தியாசப்படல் வேண்டும். பயின்று பரிசையில் தவறிய ஆசிரியருக்கு அதிக சம்பள விகிதம் தேவை.

28. பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமிப்பது ஜூன் மாதத்திலேயே நடைபெற வேண்டும் என்று ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்களைக் கேட்டுக்கொள்கிறது.

29. P. F. கடன் தீர்ந்த உடன் அடுத்த மாதத்திலேயே மறுபடியும் கடன் கொடுக்கவும், ஸ்பெஷல் லோன் கேட்கும்போது சட்டப்படி அதிகப்படியான எவ்வளவு தொகை அனுமதிக்கப்படுமோ அத்தொகை பூராவும் அனுமதிக்க ஜில்லா போர்டு தலைவரைக் கோருகிறது.

30. தலைமை உபாத்தியாயர்கள் ஸ்டாக் லிஸ்டிலிருந்து நீக்கப்படவேண்டுமென மனுசெய்து கொள்ளுங்கால் அதன் தணிக்கை அதிகாரிகள் உடனுக்குடன் தணிக்கை செய்து நீக்க உத்திரவு செய்யக் கோருகிறது.

31. சில பாடசாலைகளில் சங்கியை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போனாலும்; தேவையான ஆசிரியர்களை நியமிக்காமல் குறைந்த எண்ணிக்கையுள்ள ஆசிரியர்களே அதிகப் பிள்ளைகளுடன் கஷ்டப்பட வேண்டியிருப்பதால் ரோலுக்குத் தக்கவாறு தேவையான ஆசிரியர்களை நியமிக்க ஜில்லா போர்டார் அவர்களைக் கோருகிறது.

32. பயிற்சியில்லாத ஆசிரியர்களை நியமிக்குங்கால் சிலர் தகுந்த காலங்களில் வருவதில்லை. அதனால் அவ்வருஷம் பூராவும் வகுப்புகள் பாதிக்கப்படுகின்றன. ஆதலால் தலைமை ஆசிரியர்களுக்கு அனுமதி அளித்தால் அவ்வூரில் ஆர்வமுள்ள (Untrained) களை நியமிக்க சிபார்சு செய்து மேற்படி குறையை நிவர்த்திக்கலாம். ஆதலால் தலைமை ஆசிரியர்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமாய் ஜில்லா போர்டை இம்மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

33, காலா காலத்தில் பாடசாலைக்கு வேண்டிய (Stationary) சாமான்கள் சப்ளை ஆவதில்லை. ஆதலால் பிரதி வருஷமும் மே மாதத்திலேயே தேவையான (Stationary)களை சப்ளை செய்யுமாறு ஜில்லா போர்டைக் கோருகிறது.

34. ஆசிரியர்கள் அனுப்பிக் கொள்ளும் விண்ணப்பங்களுக்கும் பில்களுக்கும் நீண்ட நாட்கள் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பதில் கிடைப்பதில்லை. ஆதலால் தபால்களை உடனுக்குடன் கவனித்து கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு P. D. B. அவர்களையும் தணிக்கையாளர்களையும் கோருகிறது.

35. ஆரம்பப் பள்ளிகளில் வேலை நாட்கள் 220 என்றும் அதற்குக் குறைந்தால் சங்க நாட்களை ½ நாள் வீதம் கூட்டிச்சரி செய்யலாம் என்றும் 31—5—52 தேதியிட்ட R. O. C. No. E. 3-3422—52 சுற்றறிக்கையில் கூறுகிறது. ஆயினும் அன்று C. L. செல்லும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் C. L. வீதம் குறைக்கப்படுகிறது. ஆதலால் இக்குறை நீங்கி அன்று ½ நாள் C. L. ஆக கழித்துக்கொள்ள ஜில்லா போர்டையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோருகிறது.

36. தர்மபுரியில் எல்லா சர்க்கார் காரியாலயங்களும் அதன் தலைமை ஸ்தானங்களும், கூட்டுறவு ஸ்தாபனங்களும் அதன் தலைமை ஸ்தானங்களும் இருக்க தர்மபுரியில் ஏற்படுத்தப்பட்ட ஆசிரியர்களின் கூட்டுறவு நாணயச் சங்கம் ஆசிரியர்களுக்கு யாதொரு பலனுமின்றி பாலக்கோட்டில் இருந்து வருவதால் அது பலனின்றி இருக்கிறது. அது விருத்தி அடைந்து நல்ல முறையில் பணியாற்ற அந்தச் சங்கத்தை தர்மபுரிக்கே மாற்றித்தர தர்மபுரி கூட்டுறவுச் சங்கங்களின் உதவிப் பதிவாளரையும், கனம் சேலம் மாவட்ட கூட்டுறவு நாணய சங்கங்களின் தலைவர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறது.

37. பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களை நியமிக்குங்கால் சர்வீசுக்குத் தக்கபடி நியமிக்குமாறு கனம் ஜில்லா போர்டு பிரசிடெண்ட் அவர்களைக் கோருகிறது.

ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலூகா மானேஜர்கள், ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தில்

நிறைவேறிய தீர்மானங்கள்

(1—2—53)

---

1. (அ) விலைவாசிகள் ஏற்றம் மிகவும் உச்ச நிலையில் இருப்பதால் நிர்வாகச் செலவுக்கெனக் கொடுக்கப்படும் பாடசாலை நிர்வாகக் கிராண்டை 15% என்றிருப்பதை 25% ஆக உயர்த்திக்கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆ) ஷை கிராண்டும் நிர்வாகச் செலவுக்கெனக் கொடுக்கப்படுவதால் சிரத்தையுடன் நல்லபடியாகப் பாடசாலையை நிர்வகித்துவர, எக்காரணம் கொண்டும் குறைக்கப்படாமல் முழுதும் கொடுத்து ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(இ) வரவு செலவை அனுசரித்து மெயின்டெனன்ஸ் கிராண்டு கொடுப்பதாயிருந்தால், நியாயமான செலவினங்கள் அத்தனையும் சேர்த்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. ஏற்கெனவே 1–10–39-க்கு முன்பிருந்தே தலைமை ஆசிரியராகத் தொடர்ந்து இருந்து வரும் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் 4-ம், 4-க்கு மேற்பட்டும் ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளில் தலைமை ஆசிரியராகத் தங்கள் சர்வீஸ் முழுமையும் இருக்க அருகதை உடையவர்களாதலால், அவர்களுக்குக் கீழ் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை உதவியாக நியமித்தால் ஷை செகண்டரி கிரேடு ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியராக நியமிக்கும்படி வற்புறுத்தாதிருக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. (அ) தற்சமயம் சர்க்காரின் நேர் நிர்வாகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இருக்கும் சம்பள விகிதத்தை உடனடியாக எயிடெட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கும் கொண்டு வந்து சம்பளவிகிதத்தை உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஆ) ஆசிரியர்களின் நிர்ணயமான சம்பள விகிதத்தை சர்க்காரே முழுதும் கொடுக்குமாறு கேட்டுக்கொள்வதோடு மானேஜ்மெண்டார் ரூ. 3 கொடுக்கவேண்டு

மென்ற நிலைமை உண்டுபண்ணுகிறுக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(இ) ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ½ ரூபா, 1 ரூபா இங்க்ரிமெண்டை 6 வருடத்துடனும் 10 வருடத்துடனும் நிறுத்திக்கொள்ளாது, சர்வீஸ் முழுமைக்கும் இங்க்ரிமெண்ட் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. N. G. Oக்களைக் காட்டிலும் ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவுபட்டதாயிருப்பதாலும், இருக்கின்ற நிலையில் கல்வி கற்கும் பிள்ளைகளின் செலவு அதிகம் ஏற்படுவதாலும், கல்வியைப் பரப்பும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உயர்தரப் படிப்பிற்கும், கலாசாலைப் படிப்பிற்கும் இலவசமாயளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. ஒரு ஆசிரியருக்கு டிபார்ட்மெண்டிலிருந்து கிராண்ட் கொடுத்து, மானேஜ்மெண்டிலிருந்தும், அவ்வாசிரியருக்குச் சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்ட பிறகு, டிஷ ஆசிரியருக்குக் கிராண்ட் கொடுத்தது தவறு என்று ஏதோ காரணத்தால் முடிவு செய்து, கொடுக்கப்பட்ட பணம் முழுமையையும் மானேஜ்மெண்டின் நிர்வாகக் கிராண்டிலோ, அல்லது இதர ஆசிரியர்களின் கிராண்டிலோ பிடித்தம் செய்வதானது நியாயமற்றதாயிருப்பதால் அவ்வாறு பிடித்தம் செய்யாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. ஒவ்வொரு மாதமும் வரும் பாடசாலை கிராண்டில், சில சமயங்களில் குறைந்து வருங் காலங்களில், இன்னருக்கு இவ்வளவு இன்னவகையில் குறைவு என்று தெரிந்து கொள்வதற்கு ஏது இல்லாமல் இருப்பதால் அது விபரத்தை கிராண்ட் பில்லுடன் சேர்த்து அனுப்பக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. ஹையர் கிரேடு ட்ரைண்டு ஆசிரியர்கள் 3 ஆண்டுகள் சர்வீஸ் பெற்று 3 மாதம் Retrained Basic பயிற்சி பெற்றால் S. S. L. C. எழுதாமலே T. S. L. C. (Senior Basic) பரீட்சைக்கு ஆஜராகலாம் என்ற உத்தரவை வரவேற்பதோடு, அதேபோல் 5 வருட அனுபவமுடைய ஹையர் கிரேடு ஆசிரியர்கள் S. S. L. C. எழுதாமலே T. S. L. C. - க்கு (செகண்டரி கிரேடு) அனுமதிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. முதியோர் கல்விப் போதனை பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்குச் சம்பளத் திட்டத்தைக் குறைந்த பக்ஷமாக ரூ. 25-க்கு உயர்த்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சட்ட சபைகளில் ஸ்தானம் கொடுத்திருப்பதுபோல், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கும், மானேஜர்களுக்கும் ஸ்தானம் ஒதுக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

10. ஆரம்பப் பாடசாலைகளில் வேலை செய்யும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 5 ஆண்டுகள் சர்வீஸ் பெற்றபின் J. D. I. ஆக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

11. ஆசிரியர்கள் பேரில் Disciplinary Action எடுத்த போதிலும் அது முடிவாகும் வரை அந்த ஆசிரியர் கிராண்டு பெறத் தகுதியுள்ளவராகையால் அவருடைய மாதாந்தர கிராண்ட்டை நிறுத்திவைக்காமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

V. சங்கரநாராயணப் பிள்ளை,

காரியதரிசி, ராஜபாளையம்.

அறிஞர் வாயுரை

(தென்னாப்பிரிக்கா–டர்பன்–திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

நாற்புறமும் சுற்சுவர்கள் எழுப்பப் பட்டிருப்பதனாலேயே அது சிறையாகி விடாது. இரும்புக் கம்பிகளைப் போட்டிருப்பதனாலேயே அது கூண்டாகி விடாது. அமைதியும் சாந்தியும் நிறைந்த மனந் தான் ஓர் உண்மையான ஆசிரமம்.

— லவ்லேஸ்

வேலை செய்து, செய்து குறைந்து போவது நல்லது. வேலை செய்யாமலே துருப்பிடித்துப் போவது தான் கெடுதல்.

— ஜெப்ரிஸ்

ஒரு மனிதனுடைய உண்மையான குணத்தை எப்பொழுது கண்டு பிடிக்கலாம்? அவனுக்கு அதிகாரம் இருக்கிற பொழுது.

— பிட்டாகஸ்

முட்டாள் தான் தன் மனத்திலிருக்கிறதையெல்லாம் கொட்டி விடுகிறான். புத்திசாலி அப்படிச் செய்வதில்லை.

— சோலமன்

உலகத்திலேயே சில மகான்கள் இருக்கிறார்கள்; அவர்கள் சிரசில் ராஜமகுடம் இருப்பதில்லை. ஆனால் அவர்கள் முகத்தில் ராஜகளை இருக்கிறது.

— பேட்டன்

Training School-Leaving Certificate Examination, March 1953.

ELEMENTARY GRADE.

Government have permitted Lower Elementary Grade Teachers, trained under the old scheme and Nursery, Montessori and Kindergarten trained teachers working in schools recognized by the Director of Public Instruction irrespective of the fact whether they had once appeared or not for the Elementary grade Training School Leaving Certificate Examination to appear as private candidates for the Training School-Leaving Certificate Examinatnion of the Elementary Grade. This is the last one and no more chances will be given in future.

The Training School Leaving Certificate Examination will be held on the 26th March 1953 and the following days at all places at which there are training schools.

2. The subjects of examination are as follows :—

ELEMENTARY GRADE.

(1) Child Nature and Education.

(2) School Administration.

(3) Language of the Presidency (Methods and Texts.)

(4) Methods of Teaching—I (a) Elementary Mathematics, (b) Nature Study and Gardening.

(5) Methods of Teaching—II (a) Indian History and Civics, (b) Geography.

(6) Rural Social Problems.

லிங்கன் எழுதியவையும் பேசியவையும்

அவரது வாழ்க்கைக் குறிப்பு

1859 டிசம்பர் 20-ந் தேதி ஜே. டபிள்யூ. பெல் என்பவருக்குத் தேர்தல் பிரசாரத்தில் பயன்படுத்தும் பொருட்டு ஆபிரகாம் லிங்கன் எழுதியனுப்பிய வாழ்க்கைக் குறிப்பு :—

கெண்டக்கியிலுள்ள ஹார்டின் கவுண்டியில் நான் 1809 பெப்ரவரி 12-ம் தேதி பிறந்தேன். என் தாய் தந்தையர் வெர்ஜினியாவில் பெரும் புகழ் ஒன்றுமில்லாத குடும்பங்களில் பிறந்தவர்கள். என் அன்னையார் நான் பத்து வயதாயிருக்கும் போது இறந்துபோனார். என் தந்தையார் பெயரும் ஆபிரகாம் லிங்கன் என்பதுதான்.

அவர் 1781 அல்லது 1782-இல் வெர்ஜினியாவிலுள்ள ராக்கிங்காம் கவுண்டியினின்று வந்து கெண்டக்கியில் குடியேறினார். அதற்கு இரண்டொரு ஆண்டுகளில் காட்டில் ஒரு பண்ணை உண்டாக்க உழைத்துக்கொண்டிருந்தபோது அவர் கொல்லப்பட்டார். அவர் முன்னோர்கள் கிறிஸ்தவர்களுள் குவேக்கர் சபையைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் பென்சில்வேனியாவிலுள்ள பெர்க் கவுண்டியினின்று வெர்ஜினியாவுக்கு வந்தவர்கள்.

படிப்பு அதிகமில்லை

என் பாட்டனார் இறந்த காலத்தில் என் தந்தையாருக்கு ஆறு வயது. அவர் ஒன்றும் படிக்கவில்லை. எனக்கு எட்டு வயதாயிருந்தபோது அவர் கெண்டக்கியிலிருந்து இண்டியானாவிலுள்ள ஸ்பென்சர் கவுண்டிக்கு வந்து சேர்ந்தார். அந்த ராஜ்யம் ஐக்ய அமெரிக்காவைச் சேர்ந்த காலத்தில்தான் நாங்கள் புதிய இடத்தில் குடியேறினோம். அது வெறும் காடடர்ந்த இடம்; கரடிகளும் மற்றும் காட்டு விலங்குகளும் அங்கு இருந்தன. அந்த இடத்தில்தான் நான் வளர்ந்தேன். பள்ளிக்கூடங்கள் எனப்பட்டவை சில அங்கு இருந்தன. அங்கு படித்துக் கொடுத்த ஆசிரியர்களுக்கு எழுதப் படிக்கவும் சிறிது கணக்குப் போடவும் தெரிந்தால் போதும். லத்தீன் மொழி தெரிந்தவர் என்று சொல்பவர் யாரேனும் வந்துவிட்டால், அவர் வித்தைகள் தெரிந்த சித்தராகக் கருதப்படுவர். படிப்பதற்கு ஊக்க மூட்டக்கூடியது ஒன்றுமில்லை. எனக்குச் சிறிது எழுதப் படிக்கவும் கணக்குப் போடவும் தெரிந்திருந்தது. அதன் பின் நான் பள்ளிக்கூடம் போகவில்லை. அதன் பின் அவசியம் நேர்ந்த போது படிக்க வேண்டியவற்றை அவ்வப்போது படித்து அறிந்து கொண்டேன்.

இருபத்திரண்டு வயதாகும் வரை பண்ணை வேலை செய்தேன். அதன் பின் இல்லினாயஸ் போனேன். அங்கிருந்து சேலத்துக்குப் போனேன். அங்கு ஒரு பண்டகசாலையில் குமாஸ்தாவாக வேலை பார்த்தேன்.

1832-ம் ஆண்டில் நான் சட்ட சபைத் தேர்தலில் அபேட்சகனாக நின்றேன்: தோல்வியுற்றேன். அந்த ஒரு தடவை மக்கள் என்னைத் தேர்ந்தெடுக்கவில்லை. அதற்கு அடுத்த தடவை நான் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதன் பின் மும்முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன். பிறகு நான் அத்தேர்தலுக்கு நின்றதில்லை.

சட்டசபை உறுப்பினனாயிருந்த காலத்தில் நான் சட்டம் படித்தேன்; ஸ்பிரிங்பீல்டுக்குப் போய் வக்கீல் தொழில் செய்தேன். 1845-ல் காங்கிரசின் கீழ்ச் சபைக்கு நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அடுத்த தேர்தலுக்கு நிற்கவில்லை. 1849 முதல் 1854 வரை நான் மிகவும் ஊக்கமாய் வக்கீல் தொழில் பார்த்தேன்........

பதவி ஏற்கப் புறப்பட்டபோது

ஆபிரகாம் லிங்கன் முதன்முறை ஜனாதிபதியாகப் பதவி ஏற்கப் புறப்பட்டபோது ஸ்பிரிங்பீல்டில் செய்த பிரிவுரை.

1861

என் நண்பர்களே, நான் உங்களை விட்டுப் போக வேண்டியிருப்பது குறித்துப் பெரிதும் வருந்துகிறேன். நான் இப்போது அடைந்துள்ள நிலைமைக்குக் காரணம் இந்த இடமே; காரணர் இங்குள்ள மக்களே. இங்கு நான் கால் நூற்றாண்டாக வாழ்ந்திருக்கிறேன். இளைஞனாய் வந்து முதியவனாகி விட்டேன்.

என் பிள்ளைகளெல்லோரும் இங்குதான் பிறந்தார்கள். ஒரு பிள்ளையை இங்கே அடக்கம் செய்திருக்கிறது. இப்பொழுது நான் இங்கிருந்து போகிறேன். எப்பொழுது திரும்பி வருவேன் என்றோ, வருவேனோ வரமாட்டேனோ என்றோ அறியாதவனாய்ப் போகிறேன். வாஷிங்டன் செய்ததை விடப் பெரிய கடமையை ஏற்று அதனை நிறைவேற்றும் பொருட்டு நான் போகிறேன். அவருக்குத் துணையாய் நின்ற இறைவனது உதவியின்றி நான் ஒன்றும் செய்ய முடியாது. கடவுள் உதவியிருந்தால் நான் யாவற்றையும் செய்ய முடியும். இறைவன் என்னோடு வருபவர்; உங்களோடு தங்கியிருப்பவர்; எங்கும் நன்மைசெய்வோருக்குத் துணையாய் இருப்பவர். அவரைப் பற்றிக்கொண்டு எல்லாம் நன்மையாக நடைபெறும் என்று உறுதியாய் நம்புவோமாக. அவரே உங்களைக் காக்க வேண்டுமென்று உங்களை அவருக்கு ஒப்புவிக்கிறேன். நீங்களும் எனக்காக அவரை வேண்டிக்கொள்வீர்களென்று நம்புகிறேன். என் உள்ளத்தில் அன்புததும்பி நிற்க நான் உங்களை இப்போது வழியனுப்பிக் கொள்கிறேன்.

சுற்றும் உலகம்

ஏகாதிபத்யமே! வெளியேறு!!

ஒரு நாடு, இன்னோர் நாட்டை ஆட்சி புரிவது என்பது சகிக்க முடியாத கொடுமை. அந்தக் கொடுமையை நீண்டகாலம் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் தன்மான உணர்ச்சியை இழக்காமல் இருக்கிற எந்த மக்களும்! அடிமைத் தளைகளில் கட்டுண்டு கிடக்கும் மக்கள் ஒரு நாள் இல்லாவிட்டாலும் மற்றோர் நாள் விழிப்புற்றெழுந்து விடுதலைப் போர் புரிவது நிச்சயம் என்பதை உலக வரலாறு அதன் ஒவ்வோர் அத்தியாயத்திலும் தெரிவித்துக்கொண்டிருக்கிறது.

அதே உண்மையைத்தான் **கென்யா** நாட்டு வீரமக்களும் இப்போது தெரிவிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

வெறும் பேச்சால் அல்ல அவர்கள் தெரிவிப்பது. அவர்களை அடக்கி ஒடுக்கி ஆட்டிப்படைத்து வருகிற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்மீது வெகுண்டெழுந்து அவர்கள் புரியும் போராட்டத்தின் மூலமாக அவர்கள் தெரிவிக்கிறார்கள் இந்த உண்மையை.

ஆப்ரிக்கக் கண்டத்தில் உள்ள ஒரு நாடு, **கென்யா**. ஆப்ரிக்கர்கள் என்பவர்கள் அந்த நாட்டின் உரிமையாளர்கள்; அந்நாட்டின் பூர்வீக குடிகள். கென்யா, அவர்களுடையது. ஆகவே, அதனை ஆள்வது அவர்களுடைய உரிமை. இந்த நியாயத்தை ஏற்க மறுக்கிறது பிரிட்டன். கென்யாவை ஆளும் உரிமை கென்ய நாட்டு மக்களுக்குக் கிடையாது, தங்களுக்குத்தான் உண்டு என்று ஆணவமொழியால் பேசுகின்றனர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள்.

எனவேதான் கென்ய மக்கள் விடுதலைப் போர் தொடுத்திருக்கின்றனர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள்மீது.

‘கென்ய ஆப்ரிக்க யூனியன்’ என்பது அந்த நாட்டு மக்களின் விடுதலைக்காகப் போராடிவரும் அரிய அரசியல் கட்சி. சட்டபூர்வமான முறையில், அமைதிக்கும் ஒழுங்குக்கும் ஊறு நேரிடாத வகையில், சாத்விகமான சட்ட மறுப்பின் மூலமாக, அந்தக் கட்சியின் தலைவர்கள், தங்கள் நாட்டுக்கு விடுதலையைப் போராடிப் பெறும் புனிதமான பணியைப் புரிந்து வருகின்றனர்.

ஆனால், எல்லா மக்களுமே அமைதியான பாதையைக் கடைப் பிடிப்பார்கள் என்று யார்தானுகட்டும், எப்படி எதிர்பார்க்கமுடியும்? அதிலும் கென்யாவின் மக்கள் என்ன தங்களுக்கு உரிமையில்லாத ஒரு பொருளேயா ஆணவத்தால் கேட்கின்றனர்? அப்படி ஒன்று மில்லேயே! அவர்களுடைய நாடு கென்யா! அதனை அவர்களே ஆளவேண்டுமென்று கூறுகின்றனர்! அவர்களுடைய சொத்து அது! அதனை மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கின்றனர். இதுவா குற்றம்?

குற்றம் என்று நியாயபுத்தி உடைய யாரும் கூறமுடியாது. ஆனால் கூறுகின்றது பிரிட்டன். ஆகவேதான் கென்ய மக்களிலே ஒரு சாரார், "இவ்வளவு அநீதியான பாதையில் செல்லும் பிரிட்டிஷாரிடம் சமாதானம்—ஒழுங்கு—சட்டபூர்வமான வழி என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் காரியம் நடக்காது—பலாத்காரப் பாதையில் சென்றால்தான் விடுதலை நமக்குக் கிடைக்கும்" என்று முடிவு செய்து விட்டனர். மா-மா-கழகம் என்ற பெயரில் ஒரு இரகசிய சங்கத்தைத் தொடங்கி, ஆயிரக் கணக்கில் கென்ய இளைஞர்களை அதில் உறுப்பினர்களாகச் சேர்த்து, குத்து—கொலை—வெட்டு—அடிதடி என்கிற இந்தப் பாதை வழியாகச் செல்லத் தொடங்கிவிட்டனர், விடுதலை உணர்ச்சியை விடுதலை வெறியாக மாற்றி, அமைத்துக்கொண்டனர் அந்த மக்கள்.

மா-மா-கழகத்தினர், கென்ய நாட்டை ஆட்சிபுரியும் பிரிட்டிஷாரைக் குத்திக் கொல்லவும், அடித்து விரட்டவும் முனையவே, பிரிட்டிஷார், தங்களிடமுள்ள துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும், வெடிகுண்டுகளையும், போர்த்தளவாடங்களையும் அவர்கள் பக்கம் திருப்பியிருக்கின்றனர். கென்யா, ஒரு கொந்தளிக்கும் கடலாக மாறியிருக்கிறது இன்றைய தினம்.

மா-மா-கழகத்தினர் செல்லும் பாதை தவறானது என்பதை யாரும் மறுக்க முடியாது. அது பலாத்காரப் பாதை. பகுத்தறிவுள்ளவர்கள் கடைப்பிடிக்கக் கூடாத பாதை. நல்லறிவாளர்கள் அனைவராலும் கண்டிக்கப்படவேண்டிய பாதை.

ஆம்! ஆனால், அதே நேரத்தில் அவர்களுடைய நோக்கம்—தங்கள் நாட்டில் அந்நியர் ஆதிக்கம் இருக்கக்கூடாது என்கிற இலட்சியம் உன்னதமானது என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

சுதந்தரம் எமது பிறப்புரிமை!

"சுதந்தரம் எமது பிறப்புரிமை—அதை நாங்கள் பெற்றே தீருவோம்" என்கிற இடி முழக்கம் ஆப்ரிக்கக் கண்டத்தின் ஒரு பகுதி

யாகிய கென்யாவில் மட்டுமல்ல இன்றைய தினம் கேட்பது. அதே ஆப்ரிக்காவின் வேறு சில பகுதிகளாகிய மொராக்கோ, அல்ஜீரியா, டுனீசியா ஆகிய நாடுகளிலேயும் அந்த விடுதலை முழக்கம் விண்ணையும் மண்ணையும் அதிர வைத்துக்கொண்டிருக்கிறது. கென்யாவின் மக்கள் எப்படித் தங்களை அடிமைகளாக வைத்து ஆட்டிப் படைத்து வருகிற பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் புரட்சிக் கொடியை உயர்த்தியிருக்கிறார்களோ அப்படித்தான் மொராக்கோ—அல்ஜீரியா—டுனீசியா ஆகிய நாடுகளின் மக்களும் அந்த மூன்று நாடுகளையும் தன் இரும்புப் பிடியில் சிக்க வைத்து வாட்டி வதைத்து வருகின்ற பிரஞ்சு ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போர்முரசு கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மூன்று நாடுகளும் இன்றைய தினம் குமுறும் எரிமலைகளாக, கொந்தளிக்கும் கடல்களாக, சுழன்று சுழன்றடிக்கும் சூறாவளிகளாகக் காட்சி தருகின்றன. "பிரஞ்சு ஏகாதிபத்யமே—வெளியே போ" என்கிற வல்லோசை அந்த நாடுகளின் மூலை முடுக்குகளிலும் கேட்க ஆரம்பித்து விட்டது. விடுதலைப் பூமியை நோக்கி வீர நடை போடத் தொடங்கிவிட்டனர் அந்த நாடுகளின் ஆயிரமாயிரம் இளைஞர்கள்! முழந்தாள் இட்டுக்கொண்டே ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதைவிட, நிமிர்ந்து நின்றபடி ஒரு நாள் வாழ்வது மேல் என்று அஞ்சாநெஞ்சுடன் கூறியபடி அறப்போர்க் களத்தில் குதித்து விட்டார்கள் அந்த நாட்டு மாதர் குலதிலகங்கள். சுதந்தரப் போராட்டம் என்ன மானென மருளும் மங்கையருக்கும் கட்டிளம் உடல் படைத்த காளைகளுக்கும் மட்டும்தானா சொந்தம்-எங்களுக்கும் அதிலே பங்குண்டு என்று கூறியபடி அந்த நாடுகளின் தொண்டு கிழவர்களும் கூட, போராட்டத் தீயை நோக்கிப் புன்னகை பூத்த முகத்துடனே ஓடிவரத் தொடங்கி விட்டனர். "எனக்கு வேண்டியது சுதந்தரம்! அதைக் கொடு! சுவர்க்கமே என் சிறையாக அமைந்தாலும் அதை நான் விரும்ப மாட்டேன். அதன் நான்கு சுவர்களை இடித்துத் தள்ளி வெளியேறி விட்டுச் சுதந்தர புருஷனாக உலவுவதையே நான் விரும்புவேன்" என்று ஜான் டிரைடன் என்கிற பேரறிஞன் முன்னொரு காலத்தில் கூறினானே, அந்த வீர வாசகத்தில் தோய்ந்து கிடக்கும் விடுதலை ஆவேசம், ஒவ்வொரு அல்ஜீரிய மனிதனையும், ஒவ்வொரு மொராக்கோ இளைஞனையும், ஒவ்வொரு டுனீசியா பிரஜையையும் இன்றைய தினம் பற்றிக் கொண்டிருக்கிறது. அந்த நாடுகளில் இப்போது எங்கு பார்த்தாலும் சுதந்தர முழக்கம். எத்திசையில் திரும்பினாலும் அடிமை விலங்குகளை முறித்துத் தள்ளுவதால் ஏற்படுகிற மோகன கீதம். ஆம்! "நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கே உரிமையாம் என்பது உணர்ந்தோம்" என்று கவிஞன் பாரதி பாடினானே அன்றொரு நாள், அந்தக் கவிதையின் உட்பொருள் இன்னது என்பதைத் தங்களுடைய செயல்

மூலம் விளக்கத் தொடங்கி விட்டனர் அல்ஜீரிய, மொராக்க, டுனீசிய மக்கள்.

சுதந்தரம்—சமத்துவம்—சகோதரத்துவம் என்கிற இலட்சிய கீதத்தை உலகுக்கு அளித்த நாடுதான் பிரான்ஸ்! பிறக்கும்போது ஒவ்வொரு மனிதனும் சுதந்தர புருஷனாக இருக்கிறான். ஆனால் வாழும்போதோ அவன் எங்கும் அடிமைத் தளைகளில் கட்டுண்டு கிடக்கிறான் என்கிற அரிய வாசகத்தை மனித சமுதாயத்திற்கு ஈந்த அறிஞன் ரூசோ பிறந்த நாடுதான் பிரான்ஸ்! தனி மனிதர்களின் சுதந்தரத்திற்காக, அந்த சுதந்தரத்தை நிலை நாட்டுவதற்காகத் தன்னுடைய பேனாமுனையையே ஒரு போர்வாளாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் போராடிய சிந்தனைச் சிற்பி வால்டேரைப் பெற்றெடுத்த புனித பூமிதான் பிரான்ஸ். ஆனால் அதே பிரான்ஸ்தான் இன்றைய தினம் அல்ஜீரிய-டுனீசிய-மொராக்க மக்களுக்குச் சுதந்தரம் அளிக்க மறுக்கிறது. இந்த மூன்று நாடுகளிலும் பிரஞ்சு ஏகாதிபத்யம் வெறியாட்டம் ஆடிக் கொண்டிருக்கிறது இன்றையதினம். விடுதலைப் போர் புரியும் தலைவர்கள் வெஞ்சிறையில் தள்ளப் படுகின்றனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சித்ரவதைக்கு ஆளாக்கப்படுகின்றனர். பெண்கள் குலத்தின் மீதும் பீரங்கிக் குண்டுகள் ஈவு இரக்கமின்றிப் பாய்ச்சப் படுகின்றன. நூற்றுக் கணக்கான பிரஜைகள் சுட்டு வீழ்த்தப்படுகின்றனர்! "அதிகாரம் ஒரு பயங்கரமான தொத்து நோய். யாரையுமே சரி, ஒரு முறை பற்றிக்கொண்டால் அதன்பிறகு அது விடுவதில்லை" என்று அழகுபட மொழிந்தானே ஆங்கில நாட்டுப் புரட்சிக் கவிஞன் ஷெல்லி, அந்த வாசகம் எவ்வளவு உண்மை என்பதை, பிரான்ஸ், இன்றையதினம் தன்னுடைய அடக்குமுறை அத்தியாயத்தின் மூலமாகத் தெள்ளத் தெளிய விளக்கிக் கொண்டிருக்கிறது. சிறைச்சாலை—தடியடி—துப்பாக்கி—பீரங்கி-எதையும் மிச்சமாக விட்டு வைக்கவில்லை பிரான்ஸ்! என்றாலும் கூட சுடர்விட்டெழுந்துவிட்ட சுதந்தரத் தீ, அந்த அடக்குமுறை ஆர்ப்பாட்டங்களால் அணையவில்லை. எப்படி அணையும்?, நெருப்பிலே நெய்யைப் பொழிந்தால் நெருப்பு அதனால் அணைந்தா போய் விடும்? அடக்குமுறை வலுக்க வலுக்க, அல்ஜீரிய மொராக்க டுனீசிய மக்களின் சுதந்தரக் கிளர்ச்சி மேலும் மேலும் பலமடையும். அகில உலக மக்களின் கவனமும்—கவனம் மட்டும்தானா—அல்ல அல்ல, அனைவரின் பாராட்டும் ஆதரவும் கூட அவர்கள் பக்கம் திரும்பும். பிரான்சின் பெயர் மீது என்றென்றும் துடைக்கப்பட முடியாத மாசு படியும். ஆம், இது உறுதி.

ஹிட்லர் இருக்கிறார்—சாகவில்லை!

ஜெர்மானிய நாட்டிலே தோன்றி அகில உலக மக்களின் சுதந்தரத்திற்கும் ஆபத்தை உண்டாக்கிய விடுதலையின் விரோதி ஹிட்

லர் செத்துப் போய்விட்டார் என்று தான் நாம் இதுவரையில் எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால் அவர் சாகவில்லை, இன்னமும் இருக்கிறார் என்பதை தென் ஆப்ரிக்காவில் அந்த நாட்டின் முதலமைச்சர் டாக்டர் மலான் போகிற போக்கைப் பார்த்த எவரும் ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். ஆம்! ஹிட்லரின் உடல்தான் செத்துவிட்டது. ஆனால் அவருடைய உயிர் இன்னமும் இருந்துகொண்டு தான் இருக்கிறது. ஹிட்லரின் ஆவி கென்யா நாட்டிலே, பிரிட்டிஷ் அதிகாரிகளாக உருவெடுத்திருக்கிறது. டுனீசியாவிலே பிரஞ்சு ஏகாதிபத்யமாக் நடமாடிக் கொண்டிருக்கிறது. தென்னாப்பிரிக்காவிலே டாக்டர் மலான் என்கிற உருவத்தில் புகுந்து கொண்டிருக்கிறது. பல பல கூறுவானேன்! பிற மக்களின் சுதந்தரத்தை ஹிட்லர் எவ்வளவு துச்சமாகக் கருதி எவ்வளவு அலட்சியமாக அதனை அழித்தானோ, அதே போலத்தான் தென்னாப்பிரிக்க நாட்டுப் பிரதமர் மலானும் அந்த நாட்டில் வாழ்கிற இந்தியர்களின் சுதந்தரத்தை அழித்து ஒழிக்க முழுமூச்சுடன் முனைந்து நிற்கிறார். இந்த நிலையில் அவரை நடமாடும் ஹிட்லர் என்று ஆப்பிரிக்க நாட்டில் வாழும் இந்தியர்கள் கருதுகிறார்கள் என்றால் அதில் தவறென்ன இருக்க முடியும்?

டாக்டர் மலான் தென்னாப்பிரிக்காவின் முதலமைச்சராகப் பதவி ஏற்ற நாளிலிருந்து தென்னாப்ரிக்க இந்தியர்களின் நிலை பரிதாபத்திற்கு உரியதாக மாறிவிட்டது. தென்னாப்ரிக்காவில் சிற்சில குறிப்பிட்ட இடங்களை இந்தியர்களுக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிறார் டாக்டர் மலான். அந்த இடங்களில் மட்டும்தான் இந்தியர்கள் வசிக்க வேண்டுமாம். பிற இடங்களெல்லாம் வெள்ளையர்களுக்கு மட்டும்தான் தனி உரிமைப் பொருள்களாக இருக்கவேண்டுமாம். அங்கெல்லாம் இந்தியர்கள் வீடோ நிலமோ வாங்கக் கூடாதாம். அங்கே வீடோ நிலமோ வைத்திருப்பவர்கள் அவற்றை வெள்ளையர்களுக்கு விற்றுவிட வேண்டுமாம். வெள்ளையர்களும் இந்தியர்களும் ஒன்றாக வசிக்கக் கூடாதாம். அப்படி வசித்தால் இரு சாராருக்குமிடையே தீராப் பகை மூண்டு விடுமாம்.' கூறுகிறார் டாக்டர் மலான். கூறுவது மட்டுமா, சட்டமே இபற்றி விட்டார் இந்த விதமாக.

நம்முடைய நாட்டிலே எப்படி சேரி என்றோர் இடம் ஒதுக்கப்பட்டு அந்த இடத்தில் மட்டும் தான் ஆதித்திராவிடர்கள் வாழலாம் என்கிற ஏற்பாடு பன்னெடுங்காலமாக இருந்ததோ, அதே வகையான கொடுமையை, டாக்டர் மலான், தற்போது, தென்னாப்ரிக்க இந்தியர்களுக்கு இழைக்க முன் வந்துவிட்டார். இந்தியர்கள் அனைவரையும் தீண்டாதவர்களாக, இழிந்த இனத்தவராக, வெள்ளையர்களோடு சரி நிகர் சமானமாக இருக்கும் தகுதி அற்றவர்களாக எண்ணி நடத்தத் தொடங்கி விட்டார் டாக்டர் மலான்.

உலக மக்கள் அனைவரும் சமம் என்கிற கோட்பாடு அகில உலகத்தாலும் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்ட காலம் இது. பிறப்பாலோ, இனத்தாலோ, சாதியாலோ, தோலின் நிறத்தாலோ, மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வைக் கற்பிப்பது முழு மடமை என்கிற கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்ட காலம் இது. வெள்ளையர்கள் உயர்ந்தவர்கள் பிற இனத்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்கிற பழைய ஏகாதிபத்ய மனப்போக்கும், சில ஜாதிகள் மேலானவை, வேறு ஜாதிகள் இழிவானவை என்கிற வர்ணாஸ்ரமக் கோட்பாடும் வெட்டிக் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்ட காலம் இது. என் ஜாதி மற்ற ஜாதிகளைவிட உயர்ந்தது; என் இனம் பிற இனங்களைவிட மேலானது; என் குலம் மட்டும்தான் ஆண்டவனுடைய அருளால் உற்பத்தி ஆனது என்றெல்லாம் முற்காலத்தில் பல ஜாதியினரும் பல இனத்தினரும் பல குலத்தினரும் கூறி வந்தனர். அந்தக் கருத்துக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டும் இருந்தன. ஆனால் இப்போதோ, அப்படியெல்லாம் கூறுபவனைப் பகுத்தறிவற்ற விலங்கு என்று அறிஞர் உலகம் எள்ளி நகையாடுகிறது. "பிறப்பா—அது சகலருக்கும் சொந்தம்! இறப்பா—அதுவும் சகலருக்கும் சொந்தம்! பிறகு ஏது மனிதர்களுக்குள் ஏற்றத் தாழ்வு?" என்கிற கேள்வியை, சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு மனிதனும் எழுப்புகிறான் இந்த நூற்றாண்டில்! மனிதர்கள் அனைவரும் ஓர் குலம் என்கிற அசைக்க முடியாத உண்மையை, டாக்டர் மலான் ஒருவரைத் தவிர, மற்ற எல்லோரும் ஏற்றுக் கொண்டுவிட்ட காலம் நம் காலம்.

இப்படிப்பட்ட சமதர்ம சகாப்தத்தில் டாக்டர் மலான், வெள்ளையர் இனம் உயர்ந்தது, இந்தியர் இனம் தாழ்ந்தது என்கிற அடிப்படையில் இந்தியர்கள் வாழ தனியானதொரு சேரியை ஒதுக்குவரானால், அந்த இழிவை, அக்கிரமத்தை, சகிக்கமுடியாத அநியாயத்தை, யாராலும் பொறுக்க முடியாத அவமானத்தை, எப்படிப் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் தென்னாப்ரிக்க இந்தியர்கள்? ஒப்புக்கொள்ள முடியாது இந்த அக்கிரமமான ஏற்பாட்டை என்று அவர்கள் அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்டார்கள். வெள்ளையருக்கும் இந்தியருக்கும் தனித்தனி இடம் என்கிற சட்டத்தை மீறி வெள்ளையர்கள் வாழும் பிரதேசங்களில் நுழையத் தொடங்கி விட்டார்கள். மனிதர்கள் அனைவரும் சமம் என்கிற உன்னதமான கோட்பாட்டை நிலை நாட்ட அறப்போர் தொடுத்து விட்டார்கள். உத்தமர் காந்தியடிகளின் மூன்றாவது மகனாகிய மணிலால் காந்தி இந்த அறப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக் கோட்டம் புகுந்திருக்கிறார். ஆயிரக் கணக்கான இந்தியர்கள் தங்கள் இனத்தின் மானத்தைக் காப்பதற்காக எத்தகைய தியாகத் தீயிலும்

குதிக்கத் தயார் தயார் என்று முன் வந்திருக்கிறார்கள். போராட்டம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அறப்போர் புரியும் இந்தியர்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன டாக்டர் மலானின் அரசாங்கத்தால்.

சிறைச்சாலை—சவுக்கடி—தடியடி—துப்பாக்கி — எதையும் கண்டு சளைக்கவில்லை தென்னாப்பிரிக்க இந்தியர்கள். போரைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர் சென்ற ஆறு மாத காலத்திற்கும் மேலாக.

மிகவும் அமைதியாக—ஆனால் வன்மையாக, பலாத்காரம் துளியும் இல்லாமல்—ஆனால் உறுதியில் சிறிதும் தளராமல், அச்சம் என்பதை அறியாமல் ஆனால் ஆணவம் தினையளவும் இன்றி, அறப்போர் நடந்தபடி இருக்கிறது.

தென்னாப்பிரிக்க இந்தியர்கள், நியாயமான தங்கள் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக நடத்தி வருகின்ற போராட்டத்தின் அமைதியையும், ஒழுங்கையும், பலாத்காரம் இல்லாத தன்மையையும் கண்டு உலகமே வியப்படைந்திருக்கிறது. அறப்போர் என்றால் இப்படி அல்லவா இருக்கவேண்டும் என்று நடு நிலை உள்ளம் படைத்த நல்லறிவாளர்கள் அனைவரும் கூறுகின்றனர்.

தென்னாப்பிரிக்க சர்க்காரின் போக்கு ஐக்கிய நாடுகள் சங்கத்தின் அடிப்படை இலட்சியமாகிய மனிதர்கள் அனைவரும் சமம் என்கிற கொள்கைக்கே மாறானதாக இருக்கிறது. ஆகவே தென்னாப்பிரிக்க சர்க்கார் தன் போக்கைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சங்கம் தீர்மானமும் நிறைவேற்றியிருக்கிறது.

உலகம் முழுவதுமே ஒரே குரலில் ஒத்த மனத்துடன் கூறுகிறது டாக்டர் மலான் செய்வது தவறு, தவறு என்று. என்றாலும் டாக்டர் மலான் தன் பிடிவாதத்தைத் தளர்த்த மறுக்கிறார்-இன்னமும் ஒரு ஹிட்லராகவே நடமாடிக் கொண்டிருக்கிறார்.

இந்த மாதத்தில் டாக்டர் மலான் ஒரு புதிய சட்டத்தைத் தன் நாட்டுப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார். அந்தச் சட்டத்தின்படி, தென்னாப்பிரிக்க இந்தியர்களின் போராட்டத்தைப் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகளில் வெளியிடுவதுகூடக் கடுங்குற்றம்.

உலகத்தின் சமாதானத்திற்கு, இன்றையதினம், பற்பல திசைகளிலுமிருந்து ஆபத்து உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆபத்தை உருவாக்கும் அப்படிப்பட்ட திசைகளிலே ஒன்று தென்னாப்பிரிக்கா.

காலமும் கருத்தும்

அவர்கள் அப்படி !

நாம் இப்படி !

"ஏடா தம்பி - ஏன் நிற்கிறாய் மரம் போல - விழுந்து வணங்கு சூரிய பகவானை - அவர் தானடா நம் கண்கண்ட தெய்வம்"— இந்தப் பேச்சு இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது நம்முடைய நாட்டிலே! "மாரிக் காலத்தில் வானவில் ஏழு நிறங்களோடு எழில்படத் தோன்றுகிறதே, அது என்ன தெரியுமோ? சூரிய பகவானின் தேரை இழுத்துச் செல்லுகிற ஏழு குதிரைகளின் எழுவகை நிறங்களப்பா அவை" — இந்த உரையாடலை நம் மக்கள் இன்னமும் நிறுத்திவிடவில்லை. சூரியனைத் தேவனாகக் கருதி அவனுக்கு இன்னமும் நாம் பாலும் பழமும் படைத்துக் கொண்டுதான் இருக்கிறோம்; சூடம் கொளுத்தித் திருவிளக்கு ஏற்றி அவனை நித்தநித்தம் விழுந்து வணங்கிக்கொண்டு தான் இருக்கிறோம். சூரியன் ஒரு நெருப்புக் கோளம் என்பதைப் பள்ளிக்கூடத்தில் படித்த போதிலும், வாழ்க்கையில், சூரியனை, ஒரு கடவுளாகத்தான் இன்றளவும் எண்ணி வணங்குகிறோம் நாம். நமக்குச் சூரியனிடத்தில் பயம், பக்தி - ஆகவே நமக்குச் சூரியனைப்பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகளைச் செய்ய வேண்டுமே என்கிற அக்கறை தோன்றவில்லை. ஆனால், நாம் சூரியனைத் தேவனாக்கி, பெண்டு பிள்ளை குடும்பம் சுற்றத்தாரை அவனுக்குக் கற்பித்து, அவனுக்கென்று ஒரு புராணமும் ஒரு இதிகாசமும் உருவாக்கிக்கொண்டிருக்கிற இதே நேரத்தில், மேல்நாட்டினர் சூரியனின் ஒளியைப் பற்றிய அருமையான ஆராய்ச்சிகளை நடத்தி வருகின்றனர். சூரிய ஒளியைக்கொண்டு சமையல் செய்ய முடியுமா — இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் மேனாட்டு விஞ்ஞானிகளில் சிலர். இயந்திரங்களை இயக்குவதற்கும் ஆலைகளை ஓட்டுவதற்கும் சூரியனின் கதிர்களைப் பயன்படுத்த முடியுமா - இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர் அந்த விஞ்ஞானிகளில் வேறு சிலர். மின்சார சக்திக்குப் பதிலாக சூரிய சக்தியைப் பயன்படுத்த இயலுமா — இந்தக் கருத்து குடைந்துகொண்டிருக்கிறது அந்த விஞ்ஞானிகளில் வேறு சிலர் உள்ளத்தை. பிரஞ்சு நாட்டு விஞ்ஞானிகள் இந்த மாதத்தில் கண்டுபிடித்துள்ள ஓர் உண்மை, உண்மையிலேயே நம் உள்ளத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டுவதாக அமைந்திருக்கிறது.

சில வகையான நிலைக்கண்ணாடிகளைக் கொண்டு சூரியனின் ஒளியை ஒரு பிரம்மாண்டமான பாத்திரத்தின்மீது விழவைத்தால், 3000 டிகிரி உஷ்ணம் உண்டாகும் என்று அவர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த அரிய உண்மையைத் தங்கள் அறிவின் திறத்தால் ஆராய்ந்து அறிந்ததோடு நிற்கவில்லை அந்த விஞ்ஞானிகள். தாங்கள் கூறிய முறைப்படி சூரிய ஒளியைக் கொண்டு 3000 டிகிரி உஷ்ணத்தை உண்டாக்கி, அந்த உஷ்ணத்தின் மூலம் 155 பவுண்டு எடையுள்ள எஃகை உருக்கியும் காட்டியிருக்கிறார்கள். எஃகு — மிகவும் கடினமான பொருள். அந்தப் பொருள் உருகியிருக்கிறது சூரிய ஒளியால். நண்பர்கள் கவனிக்கவேண்டும் வெறும் பக்தியால் அல்ல இந்தக் காரியம் நடந்திருப்பது — அறிவின் சக்தியால்! ஆராய்ச்சியின் விளைவால்! பாரிஸ் நகர விஞ்ஞானிகள் தங்கள் அறிவின் திறத்தால் நெடுந்தொலைவுக்கு அப்பால் உள்ள சூரியனைக்கூட தங்களுடைய ஏவலாளாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாமோ? சூரியனை இழுக்க ஓர் தேர் உண்டு - அந்தத் தேருக்கோ ஏழு குதிரைகள் உண்டு என்று பஜகோவிந்தம் பாடிக்கொண்டிருக்கிறோம். அவர்கள் அப்படி! நாம் இப்படி! இப்படியே இருந்தால் நம்முடைய மனப்போக்கு, நம் நாடு முன்னேறுவதுதான் எப்படி?

அதிசயம்!

ஆனால் உண்மை!!

"ஆரம்ப ஆசிரியர்களுக்கு மாத ஊதியமாக ரூபாய் இருபத்தைந்து கொடுத்தால் போதும். அதற்குமேல் கொடுக்கவேண்டிய அவசியமில்லை." இப்படி ஒரு மனிதர் பேசியிருக்கிறார்; இந்த இந்தியாவில்! இப்படிப் பேசியிருப்பவர் விலாசம் தெரியாத பேர்வழி அல்ல—ஒரு எம்.எல்.ஏ- அதிலும் சாதாரண எம். எல்.ஏ- அல்ல—மந்திரி நாற்காலியில் வீற்றிருப்பவர்—அதுவும் கல்வி மந்திரியாக அமர்ந்திருப்பவர்—பெயர், ஸ்ரீமான் பன்னாலால் போஸ்—அவர் கல்வி அமைச்சராக இருக்கும் மாகாணம், மேற்கு வங்காளம்! பொறுப்புள்ள பதவியில் வீற்றிருக்கும் ஒரு மனிதர் இவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் பேசுவார் என்று எந்த ஆசிரியரும் எதிர்பார்க்கத் தான் முடியாது. ஆனால் எதிர்பாராதது நடந்திருக்கிறது. மேற்கு வங்காளத்தில் —பேசியிருக்கிறார் கல்வி அமைச்சர் இந்த விதமாக. நம்ப முடியாதது! ஆனால் நடந்திருக்கிறது!! அதிசயம்! ஆனால் உண்மை!! நல்லறிவாளர் எவரும் கூறக்கூடாத வாசகம்! ஆனால் கூறியிருக்கிறார் வங்காள மாகாண கல்வி அமைச்சர்!! மாத சம்பளம் ரூபா இருபத்தைந்து—போதுமாம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு—கூறுகிறார் தைரியமாக ஒரு கல்வி அமைச்சர்! எப்படிப் போதும்? உண்ண உணவு, உடுக்க உடை,

இருக்க இல்லம், படிக்க வசதி, நோயைத் தீர்க்க மருத்துவ உதவி–இந்த ஐந்தும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருந்து தீரவேண்டிய அடிப்படைத் தேவைகள். இந்த ஐந்து வசதிகளிலே எது ஒன்று குறைந்தாலும் மனிதனின் வாழ்வு முழு வாழ்வாக இருக்க முடியாது. ஆகவேதான் எந்த ஓர் அரசாங்கம், தன்னுடைய ஆட்சியின்கீழ் உள்ள அனைவருக்கும் இந்த ஐந்து வசதிகளையும் தேடித் தருகிறதோ அந்த அரசாங்கத்தைத் தான் நாகரிகமுள்ள அரசாங்கம் என்று நல்லறிவாளர்கள் கருதுகிறார்கள். நாம் கேட்கிறோம்— இந்த ஐந்து வசதிகளையும் ஓர் ஆரம்ப ஆசிரியர் பூர்த்திசெய்து கொள்ள முடியுமா இருபத்தைந்து ரூபாய் சம்பளத்தால்? ஐந்து பேர் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்குத் தேவையான அரிசியை வாங்குவதற்குக் கூடப் பற்றாதே இந்தத் தொகை! இந்த நிலையில் ஒரு குடும்பம் முழுவதும், மாதம் முப்பது நாட்களையும், கேவலம் இருபத்தைந்து வெள்ளிப்பணங்களைக் கொண்டு ஓட்டியாகவேண்டும் என்றால் எப்படி முடியும் அது? முடியும் என்று வங்காளத்து அமைச்சர் ஸ்ரீமான் பன்னாலால் போஸ் கருதுவதாக இருந்தால் அவருக்கு மட்டும் ஏன் மாத சம்பளம் ரூபாய் ஆயிரம்? கேட்க மாட்டார்களா ஆரம்ப ஆசிரியர்கள்? கேட்டால் அது குற்றமா? சென்னையில், ஆரம்ப ஆசிரியர்களுக்கு, மாத ஊதியம் ரூபா 110 என்று செய்தி வருகிறதே பத்திரிகைகளில்! அதே நேரத்தில் இங்கே ஓர் அமைச்சர் இப்படிப் பேசினால் ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளம் எவ்வளவு வேதனைப் படும்? ஏன் எண்ணிப் பார்க்கவில்லை இதை இந்தக் கல்வி அமைச்சர்? இனியாவது இப்படிப்பட்ட பொறுப்பற்ற வாசகங்களை வீசி, குமுறும் எரிமலைகளாக உள்ள ஆரம்ப ஆசிரியர்களின் உள்ளத்தில் வேதனைத் தீயை மூட்ட வேண்டாம் என்று இந்தப் பன்னாலால் போஸ்களை நாம் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுகிறோம். விஷம்போல் ஏறிவரும் விலைவாசிகளைத் தங்களுக்குத் தரப்படும் சின்னஞ்சிறு சம்பளத்தைக்கொண்டு சமாளிக்க முடியாமல், ஏற்கனவே அனலிடைப் புழுக்களெனத் துடித்துக்கொண்டிருக்கின்றனர் ஆரம்ப ஆசிரியர்கள். அவர்களைப் பார்த்து இப்படிப்பட்ட சொற்களைக் கூறுவது வெந்த புண்ணில் வேலினை நுழைப்பது போன்ற பெருங்கொடுமையாகும் என்பது நம் கருத்து.

ஆபத்து! ஆபத்து!!

இப்படித்தான் தமிழ் மக்களைப் பார்த்து அபாயக் குரல் எழுப்பியிருக்கிறார் அன்பர் அவினாசியார். தமிழர்காள்-உறங்கியது போதும் — உடனே விழித்தெழுங்கள் என்று கூறுகிறார். வெள்ளம் வருகிறது - வருமுன்னே அணை கோலப் புறப்படுங்கள் என்று தமிழர்களை அறைகூவி அழைக்

கிறார். எந்த ஆபத்தைப் பார்த்து இந்த முன்னாள் அமைச்சர் இந் நாளில் இவ்வளவு ஆத்திரப்படு கிறார் என்று தெரிய வேண்டா மா? இதோ அன்பர் அவினாசி யார் பேசுகிறார், காது கொடுத் துக் கேளுங்கள் :—"தமிழ் மக்க ளாகிய நாம் உடனடியாக கல் லூரிக் கல்விக்கான எல்லாப் பாடங்களிலும் தமிழ்ப் புத்தகங் களை எழுதத் தொடங்கவேண் டும். விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், பொருளாதாரம், அரசியல், தத்துவம் — எல்லாப் பாடங்களிலும் ஏராளமான புத்த கங்கள் உடனே தமிழ் மொழியில் வெளி வந்தாக வேண்டும். நாம் இந்தத் துறையில் அலட்சியமாக இருந்துவிட்டால் ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடும் நம் மொழியில் எல்லாக் கலைகளையும் போதிப்பதற்குத் தேவையான கல்லூரிப் புத்தகங்கள் ஏராள மாக வெளிவராவிட்டால் நம் மொழி போதனாமொழியாக இருப்பதற்குத் தகுதியற்றது என்று கூறி வட இந்திய பல் கலைக் கழகங்களில் போதனா மொழியாக நுழைக்கப்படுகிற ஹிந்தியையே தமிழ்நாட்டிலும் போதனா மொழியாக ஆக்கிவிடு வார்கள் மத்திய சர்க்கார். கல் லூரிகளில், இப்போது ஆங்கிலம் உள்ள இடத்தில், ஹிந்தி நுழைந்துவிடும். இந்த ஆபத் துக்கு நாம் சிறிதும் இடம் கொடுக்கக் கூடாது. இப்போதே விழித்தெழுந்து இந்த ஆபத் தைத் தடுக்கவேண்டும்." என்ப தாகப் பேசியிருக்கிறார் அன்பர் அவினாசிலிங்கனார், சென்னையில், 7-2-53 அன்று! அவினாசியார் கூறும் அபாயம் உண்மையி லேயே தமிழ் மக்களை எதிர் நோக்கிக் கொண்டுதான் இருக் கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் போதனா மொழி 1939-ம் ஆண் டிலேயே தமிழாக மாறிவிட்டது. ஆனால். கல்லூரிகளில் இன்னமும் ஆங்கிலம்தான் போதனாமொழி யாக இருக்கிறது. இன்றில்லா விட்டாலும் எப்போதாவது ஒரு நாள், ஆங்கிலம், அந்த ஸ்தா னத்தையும் இழந்துதான் ஆக வேண்டும். அந்த நிலையில் இந்தி, ஆங்கிலத்தின் இடத்தில் வந்து அமர முயலக்கூடும். அந்த முயற்சிக்குத் தென்னிந்தியா இடங் கொடுக்கக்கூடாது. ஆங் கிலம் இல்லை என்றால் தாய் மொழிகள்தான் போதனா மொழி களாக ஆகவேண்டுமேதவிர ஒரு நாள்கூட இந்தி அந்த நிலையை அடையும்படி தமிழர்கள் விட்டு விடக்கூடாது. தங்கள் ஏமாளித் தனத்தால் தங்கள் தாய்மொழிக் குக் கிடைக்க வேண்டிய உயரிய இடத்தை ஹிந்திக்கு விட்டுவிடக் கூடாது தமிழர்கள்.

ஆம்! அதுதான் சரி!

கோயில்களிலும் மடங்களிலும் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கும் செல்வத்தில் ஒரு பகுதியை, ஏழைமக்களின் முன்னேற்றத்திற் காகவும் நாட்டின் நல்வாழ்வுக்காக வும் செலவிடவேண்டும் — அப் படிச் செலவிடுவதால் எத்தகைய தவறுமில்லை — அது நம்முடைய

ஆஸ்திக தர்மத்திற்கு எந்த வகையிலும் மாறுனது ஆகாது என்பது நம்முடைய கருத்து. இந்தக் கருத்தை இப்போது படாதிபதிகள்கூட மனமுவந்து ஆதரிக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதைக் காண்கிறபோது நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியுமா? தருமபுர ஆதீனம் என்பது தமிழ் நாட்டில் உள்ள பழம்பெரும் மடங்களில் ஒன்று. அது செல்வமும் செல்வாக்கும் நிரம்பிய மடம். சைவ மதத்தின் கோட்டை என்று சிவநெறிச் சீலர்களால் செம்மாந்து கூறப்படுகிற இடம். அப்படிப்பட்ட மடத்தின் ஆதீனகர்த்தா சென்ற மாதத்திலிருந்து மடத்தின் செல்வத்தைக்கொண்டு பெரியதோர் அனுதை விடுதி ஒன்றை ஆரம்பித்து நடத்திவருகிறாராம். பத்திரிகைகள் கூறுகின்றன. அருமையான செய்தி! களிப்பூட்டும் சம்பவம்! இப்படிப்பட்ட செய்திகளும், சம்பவங்களும் இனி ஏராளமாக நடைபெற வேண்டும். கோயில்களின் சொத்துக்களும்மடங்களின்செல்வங்களும் ஏழை எளியவர்களின் துயரத்தைத் துடைப்பதற்கான தூய பணியில் தாராளமாகப் பயன்படுத்தப்படவேண்டும். ஒவ்வொரு பெரிய கோயிலும் மடமும் ஒவ்வொரு ஆஸ்பத்திரியையாவது திறக்க வேண்டும். ஒவ்வொரு அனுதைவிடுதியையாவது தொடங்கவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடமாவது நடத்தவேண்டும். தருமபுரத்தார் காட்டிய வழி சரியான வழி. ஏனைய மடாதிபதிகளும் கோயில் தலைவர்களும் அவரைப் பின்பற்றவேண்டும். பொதுநல நன்மைக்கான நற்பணி புரியவேண்டும். ஏழை மக்களின் வேதனையைப் போக்கு வதைவிட ஆண்டவனுக்கு உகந்த பிரார்த்தனை வேறென்ன இருக்க முடியும்?

பணம் பாழாகும் படலம்?

1947-ம் ஆண்டின் தொடக்கத்தில், இந்தியாவில் துணிப்பஞ்சம் அதிகமாக இருக்கிறது என்று கருதி, இந்திய சர்க்காரின் சார்பில், ஜப்பானியத் துணி வகைகள், ஏராளமாக வாங்கப்பட்டனவாம். ஆனால், அப்படி வாங்கப்பட்ட துணிகளில் ஒரே ஒரு கஜம் கூட பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவில்லையாம். அவ்வளவு துணி வகைகளும் நெடுங்காலம் அப்படியே மூலைகளில் முடங்கும் படி விடப்பட்டுவிட்டு, பின்னர், வாங்கிய விலையைவிடக் குறைந்த விலைக்கு, அயல் நாட்டு வியாபாரிகளுக்கு விற்கப்பட்டுவிட்டனவாம். இப்படிச் செய்யப்பட்டதன் விளைவாக இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம், 55 லட்சம் ரூபாயாம். இந்தியப் பாராளுமன்றத்தின் சார்பில் சர்க்கார் கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் தந்துள்ள திடுக்கிடத்தக்க தகவல் இது. இந்திய சர்க்காரின் அலட்சியப் போக்கால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் 55 லட்சம் என்பதை நினைத்துப் பார்க்கும்

போது நம் உள்ளம் பதறுகிறது. மிகக் குறைந்த சம்பளம் பெற்று வாடி வதங்கிக் கிடக்கும் ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தைச் சிறிதேனும் உயர்த்தக்கூடாதா என்று கேட்டால், எப்படி முடியும் உயர்த்த — பணமில்லையே எங்களிடம் என்கிறது மாகாண சர்க்கார். ஆனால், மத்திய சர்க்காரோ, ஒன்றல்ல, இரண்டல்ல, ஐம்பத்தி ஐந்து லட்சங்களை வீணுக்கு இறைத்திருக்கிறது. இந்தப் பெருந்தொகையை நன் முறையில் பயன் படுத்தியிருந்தால் பொது மக்களின் வாழ்வை வளமாக்கக்கூடிய எத்தனையோ நற்செயல்களைப் புரிந்திருக்கலாம். ஆனால், இந்திய சர்க்காரோ அலட்சியமாக இருந்திருக்கின்றனர் பண விஷயத்தில் — ஆகவே 55 லட்சத்தை ஒரு காரணமுமின்றி இழந்திருக்கிறது நம்முடைய நாடு. எந்தெந்த அதிகாரிகள் இந்த நஷ்டத்தை உண்டு பண்ணினர் என்பதைக் கண்டறிந்து, அவர்களைச் சரியான முறையில் தண்டிக்கவேண்டும் என்று கூறுகின்றனர் இந்த நஷ்டத்தைக் கண்டறிந்து தெரிவித்த விசாரணைக் குழுவினர். அவர்கள் கூறுவது முற்றிலும் நியாயம். குற்றவாளிகள் உடனடியாக விசாரணைக் கூண்டில் ஏற்றப்படத்தான் வேண்டும். ஆனால், அது மட்டும் போதாது. இப்படிப்பட்ட பணம் பாழாகும் படலங்கள் இனியாவது நடைபெறாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும் ஆட்சியாளர்கள். பொது மக்களிடமிருந்து வசூலிக்கும் பணத்தைக் கண்ணும் கருத்துமாக இருந்து காப்பாற்ற வேண்டியது ஆட்சியாளர்களின் புகற்பெருங் கடமை என்பதை யாரும் மறுக்க முடியாது அல்லவா ?

செந்தமிழ் நாட்டில் கொந்தளிப்பு !

சென்ற இரண்டு வார காலமாகத் தமிழ் நாட்டில் பெருங் கொந்தளிப்பும் குமுறலும் உருவாகியிருக்கின்றன; தமிழர்கள் உள்ளத்தில் ஆத்திரமும் கொதிப்பும் அலைமோதத் தொடங்கியிருக்கின்றன. ஆந்திர மாகாண அமைப்பு சம்பந்தமான பூர்வாங்க விசாரணைகளைச் செய்வதற்காக டில்லி ஆட்சிப்பீடத்தால் சென்னை மாகாணத்திற்கு அனுப்பப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு, பிப்ரவரி மாத முதல் வாரத்தில் தன் விசாரணைகளை முடித்து விட்டுத் தன்னுடைய ஆலோசனைகளையும் அளித்திருக்கிறார் டில்லி ஆட்சியாளர்களிடம். அவர் அளித்துள்ள ஆலோசனைகள் என்னென்ன என்பதை டில்லி அரசாங்கம் இன்னமும் பொது மக்களுக்கு அறிவிக்கவில்லை. ஆனாலுங்கூட, இனி ஏற்படவிருக்கிற ஆந்திர மாகாணத்தின் தலைநகரமாக, ஐந்தாண்டு காலத்திற்கு, சென்னை நகரையே வைத்துக்கொள்ளலாம் என்பதாக நீதிபதி வாஞ்சு தெரிவித்திருக்கிறார் என்று பத்திரிகைகளில் பலமான வதந்தி உலவு

கிறது. இந்த வதந்தியை ஆட்சியாளர்கள் இன்றளவும் மறுத்துப் பேசாத காரணத்தால் இந்த வதந்தி உண்மையாக இருக்கக் கூடும் என்றே தமிழ் மக்களால் நம்பப்படுகிறது. இந்த வதந்தி உண்மையாக இருந்து, இந்த ஆலோசனையின்படி சென்னை நகரமே ஆந்திரர்களுக்கும் தற்காலிகத் தலைநகராக அமைந்து விடுமானால், அதனால், ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே என்றும் மாறாத மனக் கசப்பும் பகையும் மூள்வது உறுதி. சென்னை நகரம் தமிழர்களின் சொத்து; தமிழ் நாட்டின் தலை நகரம்; பன்னெடுங் காலமாகத் தமிழகத்திற்கே உரிமையுடையதாகத் தமிழ் நாட்டில் இருந்துவரும் ஒரு தமிழ் வட்டாரம். இந்த நகரத்தில் ஆந்திரர்களில் சிலர் சென்ற சில காலமாகக் குடியேறியிருக்கிறார்கள் என்பதைத் தவிர, இந்த வட்டாரத்தில் ஆந்திரர்களுக்கு வேறு எந்தவித உரிமையும் கிடையாது. இந்த உண்மையை அச்சம் தயை தாட்சண்யமின்றி தெள்ளத் தெளிவாக அறிவித்துவிட வேண்டும் டில்லி ஆட்சியாளர்கள். அறிவித்துவிட்டு தகராறுக்கு இடமில்லாத ஆந்திரப் பகுதிகளை மட்டும் கொண்டதாக ஆந்திர மாகாணத்தை அமைக்க வேண்டும். அப்படி அமையும் ஆந்திர மாகாணத்தின் தலைநகரம், உயர் நீதிமன்றம், அரசாங்க அலுவலகங்கள் அனைத்தையும் ஆந்திர மாகாணத்தைச் சேர்ந்த விஜயவாடா, குண்டூர், நெல்லூர் போன்ற ஏதேனும் ஒரு நகரத்தில் வைத்துவிட வேண்டும். அதுதான் முறை; நியாயம்; ஒழுங்கு. ஆனால் அந்த ஒழுங்கான பாதையைக் கடைப்பிடிக்காமல் சென்னை நகரத்தையே ஆந்திரர்களின் தற்காலிகத் தலைநகராக ஆக்கி இருக்கிறார்கள் டில்லி ஆட்சியாளர்கள் என்பதாகப் பல பத்திரிகைகளிலும் ஒரு பயங்கரமான செய்தி உலவுகிறது. எனவே தான், தமிழர்கள், இந்தச் செய்தியைக் கேட்ட நாள் முதல், குமுறும் உள்ளமும் கொந்தளிக்கும் சொற்களும் படைத்தவர்களாக உலவுகிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் டில்லி ஆட்சியாளர்களின் இந்தத் தவறான போக்கை வன்மையாகக் கண்டித்துத் தெளிவான அறிக்கைகளை வெளியிட்டிருக்கின்றன. தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர், சென்னை நகரில் ஆந்திரத் தலைநகர் அமையுமானால், அரசாங்கத்தால் சமாளிக்க முடியாத பெருங் குழப்பம் ஏற்பட்டு அதனால் சென்னை மாகாணத்தின் அமைதி குலைவது உறுதி என்று குறிப்பிட்டிருக்கிறார். திராவிடர் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி, தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டுள்ள புதிய பேராபத்து இது என்று அறிவித்திருக்கிறார். கட்சி வேறுபாடு எதுவுமின்றித் தமிழ் மக்கள் அனைவராலும் ஆக்

(62-ம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு விருந்து

அங்கும் இங்கும்!

"இங்கிலாந்திடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் பல இருக்கின்றன. அவற்றிலே மிகவும் முக்கியமான பாடம் தன் நாட்டுக் குழந்தைகளின் நன்மைக்காக இங்கிலாந்து எவ்வளவு அரும்பாடு படுகிறது என்பது தான். இங்கிலாந்திலே இருக்கிற மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம், நகராட்சி மன்றங்கள், மாவட்ட ஆட்சி மன்றங்கள், கிராமப் பஞ்சாயத்துகள் ஆகிய அரசாங்க உறுப்புக்கள் அத்தனையும் தங்கள் வருமானத்திலிருந்து ஒரு பெரும் பகுதியை, குழந்தைகளின் நலத்தை வளர்ப்பதற்காகவென்றே ஒதுக்கி வைக்கின்றன. குழந்தைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதுதான் தன்னுடைய முதற் பெருங்கடமை என்று இங்கிலாந்தின் அரசாங்கம் கருதுகிறது. குழந்தைகளின் நன்மையில் இங்கிலாந்தின் அரசாங்கம் எவ்வளவு கண்ணும் கருத்துமாயிருக்கிறது என்பதை விளக்க ஒரே ஒரு உதாரணம் தருகிறேன். இங்கிலாந்து முழுதிலுமுள்ள ஒரு வயது முதல் ஆறு வயது வரை உள்ள **எல்லாக் குழந்தைகளுக்கும்** தினந்தோறும் போதுமான அளவு பால் **முற்றிலும் இலவசமாக** அரசாங்கத்தால் அளிக்கப்பட்டு வருகிறது. அதன் விளைவு என்ன தெரியுமா? இங்கிலாந்தில் உள்ள குழந்தைகள் எல்லாம் இப்போது மகிழ்ச்சியாகவும், திருப்தியாகவும், சிறந்த உடல் நலத்தோடும் அரிய மனவளத்தோடும் திகழ்கின்றன." என்று இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய பல நாடுகளை அடிக்கடி கண்டு வந்திருக்கிற சர். சி. பி. இராமசாமி அய்யர் அண்மையில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் அவர் ஆற்றிய சொற்பொழிவு ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறார். கேட்கும்போதே உள்ளத்தைக் குளிர்விக்கும் உன்னதமான சேதியாக இருக்கிறது—எல்லாக் குழந்தைகளுக்கும் பால்-அதுவும் தினந்தோறும்-அதுவும் முற்றிலும் இலவசமாக! இந்தச் செய்தியை அறியும்போது யார்தான் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியும்? மட்டற்ற மகிழ்ச்சி நமக்கும் ஏற்படத்தான் செய்கிறது—ஆனால் அந்த மகிழ்ச்சி ஒரு கணம் தான் நிற்கிறது—அடுத்த விநாடி நம் நாட்டின் நிலை என்ன என்கிற கேள்வி நம் மனத்திரையின் முன் எழுகிறது—உடனே மகிழ்ச்சி மறைகிறது, வேதனை நம் உள்ளத்தை வாட்டுகிறது. இங்கிலாந்தின் அரசாங்கம் தன் குழந்தைகள் அனைவருக்கும் தினந்தோறும் இலவசமாகப் பால் தருகிறது. ஆனால் நம்முடைய அரசாங்கம்—? தருகிறதா? இல்லை! ஏன்? தந்தால் எவ்வளவு நன்று

யிருக்கும்? தாமுமா இனி யாவது?

அந்த 160 கோடி!

அமெரிக்காவிடமும் சோவியத் ரஷ்யாவிடமும் பல அணுக்குண்டுகள் இருக்கின்றன என்பது உலகம் அறிந்த செய்தி. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம், மூன்று மாதங்களுக்கு முன்புதான், அதனுடைய முதல் அணுக்குண்டைச் செய்து முடித்திருக்கிறது. அந்த ஒரு அணுக்குண்டைச் செய்வதற்காக மட்டும் பிரிட்டனுக்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு எவ்வளவு தெரியுமா? 160 கோடி ரூபாய்! ஓர் ஆயிரம் அல்ல, ஒரு இலட்சமும் அல்ல, ஒரு கோடிகூட அல்ல, 160 கோடி ரூபாய்கள் செலவாகியிருக்கின்றன ஒரே ஒரு அணுக்குண்டை உற்பத்தி செய்ய! ஆனால் அமெரிக்காவும், ரஷ்யாவுமோ, இதைப் போலப் பலப்பல அணுக்குண்டுகளை வைத்திருக்கின்றன. கணக்குப் போட்டுப் பாருங்கள்—அவ்வளவு அணுக்குண்டுகளையும் உற்பத்தி செய்ய எவ்வளவு பெருந்தொகை செலவாகியிருக்கும்! அவ்வளவு தொகைகளையும், கோடிக்கணக்கான மக்களைக் கொன்று குவிப்பதற்குத் தேவைப்படுகின்ற அணுக்குண்டுகளை உற்பத்தி செய்யும் உபயோகமற்ற பணியில் செலவிடாமல், பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக வென்று செலவிட்டால், உலக மக்களின் வாழ்க்கை எவ்வளவு உன்னதமான நிலையை அடையும்! மூன்றாவது உலகப் பெரும் போர் மூண்டுவிட்டால் என்ன செய்வது என்கிற அச்சத்தின் விளைவுகள் தான் இந்த அணுக்குண்டுகள். ஆனால் சோவியத் ரஷ்யா—அமெரிக்கா—பிரிட்டன்—செஞ்சீனா முதலிய உலக வல்லரசுகள் ஒன்றுகூடி, ஒரு சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு, அப்படிச் செய்வதன் மூலமாக உலகத்தில் இனி என்றென்றும் போரே மூள்வதற்கு இல்லாதபடி செய்து விடுவார்களானால், இப்போது அணுக்குண்டுகளுக்காகச் செலவிடப்படும் இவ்வளவு தொகைகளையும் மக்களின் நல்வாழ்வுக்காகச் செலவிடலாம். ஆமாம்! ஆனால் அப்படிப்பட்ட ஒரு சமாதானத்தை நிலைநாட்ட உலக வல்லரசுகள் முன் வருமா? வருமா?

புள்ளி விவரம் பேசுகிறது!

சராசரிக் கணக்குப்படிப் பார்ப்பதானால் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மனிதர்களின் வாழ்நாள் எவ்வளவு தெரியுமா? இதோ புள்ளி விவரம் பேசுகிறது, அன்பு கூர்ந்து செவி கொடுங்கள்:—

மனிதர்களின் சராசரி வயது:— நியூஜிலாந்தில் 67. ஸ்வீடனிலும், நார்வேயிலும் 63. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் 62. கனடாவில் 60. பிரான்சில் 57. ரஷ்யாவில் 45. ஆனால், இந்தியாவில் வாழும் மனிதனின் சராசரி வயது—பரிதாபம், பரிதாபம்—கேவலம் 27. ஆமாம் நண்பர்களே, ஆமாம், நியூஜிலாந்து மனிதன் 67 ஆண்டுகள் வாழ்

கிறான்—ஸ்வீடன்காரன் 63 ஆண்டுகள் இந்த உலகில் உலவுகிறான்—ஆங்கிலேயனுக்கு "ஆண்டவன் அளித்துள்ள" காலம் 63.—அமெரிக்கன் வாழ்வது 62 ஆண்டுகள்—ஆனால், நாமோ 27 ஆண்டுகள் முடிவதற்கு முன்னரே இந்த உலகத்தைவிட்டு மறைந்து விடுகிறோம் நாமும் மற்ற பல நாட்டு மக்களைப் போல் நீண்ட காலம் வாழ வேண்டாமா? நிச்சயமாக வாழத்தான் வேண்டும் என்று நீங்கள் கூறுவீர்கள். ஆனால் கூறிவிட்டால் மட்டும் போதுமா? ஏன் பிற நாட்டு மக்கள் யாவரும் நீண்ட காலம் வாழ்கிறார்கள் என்பதையும், ஏன் நம் நாட்டுப் பிரஜைகள் மட்டும் குறுகிய காலத்திற்குள் மறைகிறார்கள் என்பதையும் கண்டறிய வேண்டும். கண்டறிந்ததும் அந்தக் குறைகளைக் களைவதற்கு அனைவரும் முயலவேண்டும். அனைவரும் என்றால் ஆட்சியாளர்கள் உட்பட அனைவரும். முயல்வார்களா?

வேதனை! வேதனை!!

இந்தியாவில் உள்ள எல்லா மனிதர்களும் ஓர் ஆண்டுக் காலத்தில் சம்பாதிக்கிற சம்பாதனை அவ்வளவையும் ஒன்றாகக் கூட்டி, அப்படிக் கூட்டியதால் வரும் தொகையை, இந்தியாவில் உள்ள மொத்த மனிதர்களின் எண்ணிக்கையால் வகுத்துப் பார்த்தால் ஓர் இந்தியனின் சராசரி வருமானம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு என்பது திட்டவட்டமாகத் தெரிந்து விடும். அப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்ததில், இந்தியப் பிரஜையின் சராசரி வருமானம் ஆண்டுக்கு ரூபா 64-6-0 என்று தெரிவிக்கிறது "நமது இந்தியா" என்கிற சிறந்த புத்தகம். சராசரி இந்தியனின் ஓராண்டுக் கால வருமானம் 64-6-0 என்றால் ஒரு மாத கால வருமானம் ரூபா 5-5-10 ஆகிறது. நம் நாட்டு மனிதனின் சராசரி மாத வருமானம் ஐந்து ரூபாய், ஐந்து அணா, பத்து தம்பிடி தான் என்று சொன்னால் இதைவிட இந்தியாவுக்கு வேதனை யூட்டும் சேதி வேறென்ன இருக்க முடியும்? சராசரி மாத வருமானம் ஐந்து ரூபா ஐந்தணா பத்துத் தம்பிடியாக இருக்கும்போது சராசரி இந்தியனின் வயது கேவலம் இருபத்தேழாக இருப்பதிலே வியப்பென்ன இருக்கிறது? எல்லா இந்தியர்களும் நீண்ட காலம் உயிர் வாழவேண்டுமானால், அவர்களுடைய சராசரி வருமானம் நிச்சயமாக உயர்ந்தாக வேண்டும். சராசரி மாத வருமானம் ரூபா நூறு என்றுவது ஆனால் தான், அதாவது இப்போது இருப்பதை விட மாத வருமானம் இருபது மடங்காவது உயர்ந்தால்தான், இந்தியர்களின் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக இருக்க முடியும். புள்ளி விவரங்கள் பேசுகின்ற உண்மை இது.—இட்டுக் கட்டிக் கூறப்படும் கற்பனை ஓவியம் அல்ல!!

தன் கையே தனக்கு உதவி

(ரால்ப் வால்டோ எமர்சன்)

நம் உள்ளத்தில் தோன்றும் உயர்ந்த எண்ணங்களை உடனே ஒழித்துவிடுகிறோம். அவை பெரியார் வாய் மொழிகளாகச் சொல்லப் படும்போது சிறப்பு வாய்ந்தனவாகத் தோன்றுகின்றன. அவை நாம் புறக்கணித்த கருத்துக்களே என்று பின்னர் காண்கின்றோம்.

பொறாமை கொள்வது அறியாமை யென்றும், மற்றவர்களைப் போல் நடித்தல் தற்கொலை என்றும் ஒவ்வொருவரும் ஒரு காலத்தில் உணர்கின்றனர். ஒவ்வொருவருக்கும் உள்ள ஆற்றல் இயற்கையில் ஒரு புதுமையே. ஒவ்வொருவருக்கும் தாம் செய்யக் கூடியது இன்னது என்பது தெரியும்; அதுவும் செய்து பார்க்காவிட்டால் தெரியாது.

உன்னை நீ நம்பு. இறைவன் உனக்கு வழங்கியுள்ள நிலைமையை ஏற்றுக்கொள். பெரியோர்கள் யாவரும் அவ்வாறே தங்களுக்கு அருளப்பட்ட நிலைமையை ஏற்றுக் கொண்டு, தங்களை நம்பி, தங்கள் கைகளால் உழைத்து, மேம்பாடெய்தினார்கள்.

நாம் இன்று மனிதராகப் பிறந்திருக்கிறோம். நாம் ஒன்றும் செய்ய முடியாதவர்கள் அல்ல. நாம் புரட்சிக்கு அஞ்சியோடும் கோழைகள் அல்ல. நாம் வழிகாட்டிகள், மீட்பவர்கள்; நன்மை செய்கிறவர்கள்; எல்லாம் வல்ல ஆற்றலுக்கு அமைந்து குழப்பத்தையும், காரிருளையும் கடந்து செல்ல வேண்டியவர்கள்.

நாம் தனிமையாயிருக்கும் போது கேட்கும் ஒலிகளை மக்கள் கூட்டத்தில் கேட்பதில்லை. மனிதன் தன் முழுத்தன்மையை அடையாதவாறு ஜன சமூகம் எங்கும் தடை செய்கிறது. உரிமையை இழந்து உணவு பெற வேண்டியதாகிறது. ஒருவன் தன் கையையே தனக்கு உதவியாகக் கொள்ள வேண்டுமென்பதை ஜனசமூகம் விரும்பவில்லை. புதிதாய் ஒன்றை ஆக்க வேண்டுமென்னும் பேச்சையே ஜன சமூகம் வெறுக்கிறது; பழைய பெயர்களையும் பழக்க வழக்கங்களையும் அது போற்றுகிறது.

மனிதனாய் வாழ விரும்புவோன் வழக்கத்திற்கு இணங்காதவனாகத் தான் இருத்தல் வேண்டும். உன் மனத்தின் நேர்மையேயன்றி மற்றைய தொன்றும் சிறந்ததாகாது.

இறந்து பட்ட பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தால் உன் ஆற்றல் சிதறிப் போகும்; உன் காலம் வீணாகும்; உன் பண்பில் மாசு படியும்.

உன் கடமையை நிறைவேற்று. நீ உன் வேலையைச் செய்தால் உன் ஆற்றல் பெருகும்.

வழக்கத்துக்கு அடிமைப்படுவது கண் கட்டி விளையாடுவது போன்றது. ஒருவர் விரிவுரை நிகழ்த்துகிறார். அவர் தாம் உறுப்பினராயுள்ள அமைப்பு என்றும் நிலவுதல் வேண்டும் என்று சொல்கிறார். புதிய கருத்தொன்றும் சொல்ல அவரால் இயலாது என்பது எனக்கு முன்னரே தெரியும்.

பழைய அமைப்பு நின்று நிலவ வேண்டும் என்பதற்கு அவர் காரணங்கள் காட்டுகிறார். ஒரே திசையையன்றி வேறு திசையை அவர் நோக்கமாட்டார். இவ்வை எனக்குத் தெரியும்.

பலர் யாதேனும் பழங்கொள்கைக்கு உரிமைபூண்டு வாழ்கின்றனர். அவர்கள் உண்மை யென்பதெல்லாம் முற்றும் உண்மையாகாது. அவர்கள் இரண்டு என்பது உண்மையான இரண்டு அன்று; அவர்கள் நான்கு என்பது உண்மையான நான்கு அன்று. அவர்கள் உரைக்கும் ஒவ்வொரு சொல்லும் நம் மனத்தை வருத்துகின்றது; அவர்களைச் சீர்திருத்தும் முறை நமக்குத் தெரியவில்லை.

(அமெரிக்கன் ரிப்போர்ட்டர்)

(57-ம் பக்கத் தொடர்ச்சி)

ரோஷத்துடன் எதிர்க்கப்பட வேண்டிய கொடுமை இது என்று கூறுகிறார் திராவிட முன்னேற்றக் கழகப் பொது செயலாளர் அறிஞர் அண்ணாதுரை. "சென்னை நகரில் ஆந்திரர்களின் தற்காலிகத் தலைநகரை அமைப்பது அபாயகரமான நடவடிக்கையாகும். தனி மாகாணத்துக்கான உறுதியான போராட்டத்துக்குப் பின் வெற்றியடைந்துள்ள ஆந்திர மக்களுக்கு இந்த நடவடிக்கையினால் தீமையே விளையும். ஆகவே ஆட்சியாளர்களின் இந்த நடவடிக்கையை எதிர்த்து மாகாணம் முழுவதிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட வேண்டும்" என்று தெளிவாகத் தெரிவிக்கிறது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாட்டுக் கமிட்டி. கட்சி பேதம்—கொள்கை பேதம்—சொந்த விருப்பு வெறுப்புகள்—அரசியல் இலாப நஷ்டக்கணக்கு—எதுவும் குறுக்கே நிற்கவில்லை—தமிழ் மக்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் கூறுகிறார்கள் எங்கள் சென்னையில் ஆந்திரத் தலைநகரை வைக்காதே என்று. எல்லாக் கட்சித் தமிழர்களும் ஒன்று கூடி எழுப்பியுள்ள இந்த எச்சரிக்கையையும் மீறி, டில்லி சர்க்கார், சென்னையில் ஆந்திரத் தலைநகரை அமைப்பார்களானால், விளைவு விபரீதமாகும்—தமிழர்களின் குரலில் உள்ள உறுதி அதைத்தான் தெரிவிக்கிறது. ஆழ்ந்து சிந்திக்கட்டும் ஆட்சியாளர்கள். அபாயகரமான நடவடிக்கையை அவசரப்பட்டு செய்துவிட வேண்டாம்.

வாழைத் தண்டிலும் கொல்லாம் பழத்திலும்

புதியன காணும் மைசூர் நிபுணர்கள்

இரும்பைப் பொன்னுக்கும் இரசவாதிகளைப் பற்றிக் கதைகளில் கேட்டிருக்கிறோம். மைசூரில் சில விஞ்ஞானிகள் வாழைத் தண்டிலும் கொல்லாம் பழத்திலும் புதிய புதிய உணவுப் பொருள்கள் செய்கிறார்கள்.

வாழைத் தண்டிலிருந்து உண்ணக்கூடிய சில மாவுகள் செய்திருக்கிறார்கள். கொல்லாம் பழத்திலிருந்து சுவைமிக்க பானமொன்றும், ஊறுகாயும், கற்கண்டும், இன்பண்டம் இன்னொன்றும் செய்திருக்கிறார்கள்.

மைசூரில் மத்திய அரசாங்கத்தார் நிறுவியுள்ள உணவுத் தொழில் நுட்ப ஆராய்ச்சி நிலைய நிபுணர்களின் அரிய முயற்சிகளுக்கு இவை சிற்சில உதாரணங்களே.

அங்கு உள்ளே போய்ச் சுற்றி வந்தால் ஓரிடத்தில் சோறு பொங்குவதுபோல் காண்பீர்கள். ஆனால் அது வயலில் விளைந்து அறுத்தடித்த நெல்மணிகள் ஈந்த அரிசியல்ல; சர்க்கரைவள்ளி (சீனிக்) கிழங்கினாலும், வேர்க்கடலையினாலும் செயற்கையாய் ஆராய்ச்சிக் கூடத்தில் செய்த அரிசியாகும். கழனிதரும் அரிசி பின்னும் இதன் விலை கால்வாசி குறைவாகும். ஆயினும் சத்தான உணவு அரிசியில் உள்ளதுபோல் இந்தச் செயற்கை அரிசியிலும் உண்டு என அந்த நிலையத்து அறிஞர் கூறுகின்றார். தென்னாட்டின் அரிசித் தட்டுப்பாட்டை இது நீக்கிவிடும்' என்பது அவரது கருத்து.

அங்கே இன்னோரிடத்தில் தயிர்ச் சாடிகள் அடுக்கி வைத்திருப்பதைக் காணலாம். ஆம், தயிர்தான். ஆனால், மாடு எதுவும் கறவாத பாலினால் ஆன தயிர். வேர்க்கடலைப் பாலினால் செய்த தயிர். இதனால் ஐஸ்கிரீம், பாற்கட்டி ஆகியவற்றையும் செய்யலாம்.

அவற்றைப் பார்த்த வண்ணம் அப்படியே நகர்ந்து சென்றால், இன்னோரிடத்தில் சில கண்ணாடிப் புட்டிகளில் வெள்ளையும், மஞ்சளும் சிவப்புமாகப் பல மாவுப் பொடிகள் இருப்பதைக் காணலாம். இவையெல்லாம் பழங்களைப் பிழிந்து சாறு எடுத்து நீறாக்கி வைத்திருக்கும் பொடிகளாகும். பழத்தினுடைய சத்தெல்லாம் இந்த நீற்றுப் பொடிகளிலே சற்றும் குறையாமல் அப்படியே இருக்கின்றன; பச்சைப் பழச் சாற்றின் மணமும் மாவில் உண்டு. பழம் கெட்டுப்போம், ஆனால் அதன் நீற்றுப் பொடியோ மாதக் கணக்காகப் புட்டியிலே கெடாமல் இருக்கும். இதற்கு முன்னும் பழச்சாற்று மாவுகள் செய்யப்பட்டு வருகின்றன உலகில் பல இடங்களிலும். அவை பழத்தைப் பிழிந்து செய்யப்படுவன அல்ல. இராசாயன உப்புக்களால் செயற்கையாய்ச்

செய்யப்படுவனவாகும். இங்கே மைசூரில் தான் முதன் முதலாக மெய்யான பழங்களிலிருந்தே அவற்றின் சாற்றுப் பொடிகள் செய்யப்படுகின்றன என்று அந் நிலைய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தோன்றி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

வியக்கத்தகும் இத்தகைய அருஞ் செயல்கள் புரிந்துவரும் இந்த உணவு ஆராய்ச்சி நிலையம் ஆரம்பமாகி இரண்டு ஆண்டே ஆகிறது. இந்நாட்டின் உணவுப் பற்றுக் குறையைப் போக்குவதற்கு இந்திய அரசாங்கம் நிறுவியது இந்நிலையம். 1950-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இந்திய விஞ்ஞான,தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் இது தோற்றுவிக்கப்பட்டது. உண்ண முடியாத பயிர் பச்சைகளிலிருந்து உண்ணும் உணவைத் தோற்றுவித்தல்; பூச்சிகளாலும் நோய்களாலும் வீணாகப் போகாதவாறு உணவுப் பொருட்களைச் சேர்த்துவைக்கும்வழிவகைகளைக் காணல்; இந்தியாவுக்கு எந்த உணவுப் பொருள் தட்டுப்பாடாகிறதோ அதற்குமாற்றாகப் பயன்படுத்தக்கூடிய உணவு வகைகளைக் கண்டு பிடித்தல்—இவையே இந்த உணவு ஆராய்ச்சி நிலையத்தின் வேலைகள்.

இந்நாட்டுப் பழவகைகள் பல. அவை அழுகிக் கெட்டுப் போகவும் கூடியன. இவற்றை நெடு நாளைக்குக் கெடாமல் புட்டிகளில் அடைத்து வைக்கும் முறைகளை மைசூர் ஆராய்ச்சி நிலையத்தார் ஆராய்கின்றனர். கறிவகைகளைச் செய்து அவற்றையும் கெடாமல் பாதுகாத்துப் புட்டிகளில் அடைத்து அனுப்பும் வகையும் ஆராயப்படுகிறது. பச்சைக் குழந்தைகளும் நோயுற்ற முதியோரும் உண்டு எளிதில் சீரணிக்கக்கூடிய உணவு வகைகள் செய்யப்படுகின்றன. உணவுப் பொருட்களைச் சணல் சாக்குகளில் (கோணிகளில்) மூட்டை மூட்டையாகக்கட்டி அடுக்கிவைக்கும் காலத்தில் கரையான் முதலியன அரித்து சேதமாவது உண்டு; இதனைத் தடுப்பதற்காக, பூச்சி அணுகாதபடிச் சணல் சாக்குகளை ஒருவகை இரசாயன உப்பினால் பூசிவிடும் முறையை ஆராய்கின்றனர்.

இந்த மைசூர் ஆராய்ச்சி நிலையத்தைப் பார்த்துவரப் போவோருக்கு அங்குள்ளோர் செயற்கை அரிசிச் சோற்றையும், வேர்க்கடலைப் பாற்கட்டியையும் தக்காளிப் பழச் சாற்றுப் பொடியையும் மற்றும் பலவற்றையும் ருசி பார்க்கக் கொடுக்கலாம். சுவை பார்த்ததும் "இது எங்கே கிடைக்கும்?" "இதை எப்படிச் செய்வது?" என்ற கேள்விகளே அந் நாவில் தோன்றும்.

"எப்படிச் செய்யலாம்?" என்பதற்கு ஆராய்ச்சி நிலையத்தார் எளிதில் விடையிறுக்க முடியும். சிறு சிறு வெளியீடுகள் பல அவர்களிடம் உண்டு.

Edited, Printed and Published, by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95, New St. Mannady. Madras—1.